Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency post Office
303, K.K.S.ROAD JAFFNA T.P.021 - 22 2670
FAX - 222 3214 email-del-srnskr @ evreka.lk
(சி.1136)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஜ.ஆகிர் 26 (25.08.2003) திங்கட்கிழமை இதழ்: 325

# இலங்கையின் அரசியல் மாற்றங்களை உன்னிப்பாக அவதானிக்க வேண்டுமாம்!

## லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவுக்கு ஆலோசனை

(கொழும்பு)

இலங்கையில், அரசியல் ரீதியாக மிக விரைவில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் குறித்து இந்தியா உன்னிப்பாக அவதானிக்க வேண்டும் என்றும் -

இலங்கையில் ஏற்படக்கூடிய அரசியலமைப்பு மாற்றங்கள் இந்தியாவுக்குச் சாதகமானதாக இருக்காது என்பதால், இது குறித்து இந்தியா சிந்தித்துச் செயற்படவேண்டும் என்றும் ஆலோசனை தெரிவித்துள்ளார் - ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர்.

இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பிய கதிர்காமர், வெளிநாட்டுப் பத்திரிகையாளரைச் சந்தித்தபோதே, இக்கருத்துக்களை வெளியிட்டார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கையின் சமாதான முயற்சிகளில், உலக நாடுகளின் தலையீட்டைவிட இந்தியாவின் தலையீடு விடுதலைப் புலிகளுக்கு கவலைதருவதாக உள்ளது. இந்தியா தொடர்ந்தும் இலங்கை விவகாரத்தில் தலையிடாதிருப்பது ஆபத்தானது.

சர்வதேசத்தின் பாதுகாப்பான பிரதேசம் என்ற கருத்துத் தொடர்பாக கேட்கப்பட்டபோது, இலங்கையின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சர்வதேச (10 ஆம் பக்கம் பார்க்க)



## தியாகி திலீபன் நினைவுத்தூபி இன்று திறப்பு

நல்லூர் பின்வீதியில் மீளமைக்கப்பட்ட தியாகி திலீபன் ஞாபகார்த்த நினைவுத்தூபி, இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

நல்லூர் கோட்ட எழுச்சிப் பேரவையின் செயலாளர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில், மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில், ஈகைச்சுடரை மாவீரர் அருச்சுனாவின் பெற்றோர் ஏற்றிவைக்க, பொதுச்சுடரை நல்லூர்க் கோட்டப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் ஏற்றிவைப்பார்.

தொடர்ந்து - தமிழீழத் தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றிவைப்பார்.

குடாநாடு இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டபோது, முன்பிருந்த தியாகி திலீபனின் நினைவுத்தூபி உடைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### விண்ணாணம் விநாசியர்



அம்மாவுக்கு மட்டுமல்ல இந்தியாவுக்கும் ஆலோசகர் ஆயிட்டாரோ...?

# புலிகளின் முகாமை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்காது!

## சந்திரிகாவின் உத்தரவுக்கு ஒஸ்ரின் பெர்ணான்டோ பதில்

(கொழும்பு)

**அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் தமது முகாம்களை நிறுவினாலும் - அதை அகற்றுவதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்க முடியாது என்றும், புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் நோர்வே அரசாங்கமுமே இது தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வுகாண வேண்டும் என்றும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

குரங்குப்பாஞ்சானில் உள்ள புலிகளின் முகாமை அகற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டது குறித்தே ஒஸ்ரின் பெர்னாண்டோ இக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இரு தரப்புகளுக்குமிடையிலான சர்ச்சைக்குரிய சம்பவங்கள், விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து, தீர்வுகளைக் காணும் பொறுப்பு நோர்வே அரசாங்கத்திடமும் கண்காணிப்புக் குழுவிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நிலையில், இராணுவக் (10 ஆம் பக்கம் பார்க்க)

### அரசியல் எதிர்காலம் குறித்து

## கேரள சோதிடருடன் ரணில் ஆலோசனை!

இந்தியா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பிரபல சோதிடர் பணிக்கரைச் சந்தித்து, ஆலோசனை பெறவுள்ளார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாடு திரும்பவுள்ள பிரதமர், முன்னதாக மலப்புரந்துக்குச் சென்று சோதிடரைச் சந்திப்பதற்குத் திட்டமிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் ஆட்சிக்கு ஜெயலலிதா திரும்பவும் வருவாரென ஆரூடம் தெரிவித்ததையடுதத்தே, சோதிடர் பணிக்கர் புகழ்பெற்றிருந்தார்.

இதேவேளை - குருவாயூரில் அமைந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணன் ஆலயத்திற்குச் சென்றிருந்த பிரதமரும் அவரது மனைவியும் வெண்கலத்தினாலான குத்துவிளக்கொன்றை ஆலயத்திற்கு வழங்கித் தரிசித்தனர்.

## பொலிஸாருக்கான ஆட்சேர்ப்பு:

# அம்பாறை நேர்முகத்தேர்வில் குறைவானோரே பங்கேற்பு!

அம்பாறை மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற, பொலிஸாருக்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகத்தேர்வுக்கு, மிகக் குறைந்தளவிலானோரே தோற்றியதாகப் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கல்முனை பொலிஸ் பிரிவில் 30 பேரும், அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் 20 பேரும், நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டனர். ஆனால், இவர்களில் எவரும் தகுதியானவர்களாக இருக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - நேற்று முன்தினமும், நேற்றும் திருகோணமலையில், நடைபெற்ற பொலிஸுக்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகத்தேர்வுக்கு கொன்ஸ்டபிளுக்கு 325 பேரும், உதவிப் பொலிஸ் அதிகாரிப் பதவிக்கு 25 பேரும் தோற்றியிருந்தனர்.

# வடக்கு - கிழக்கு இணைந்த ஒரே அலகு; நான்கு தமிழ்க் கட்சிகள் கூட்டாக அறிக்கை!

வடக்கு - கிழக்கு மாகாணம் இணைந்த ஒரே நிர்வாக அலகு என்பதில் எந்தவித மாற்றமும் இல்லையென - ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) ஈரோஸ் ஆகிய கட்சிகள் கூட்டாகத் தெரிவித்துள்ளன.

இலங்கை - இந்திய ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அதிகாரப்பகிர்வு நடவடிக்கைகளுக்கு அமைய, வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டமை மிக முக்கியமான விடயமென்று இந்தக் கட்சிகள் கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணைந்திருக்கும் வடக்கு - கிழக்கைப் பிரிப்பது சம்பந்தமாகக் கூறப்படும் கருத்துகள், அந்த மாகாண மக்களிடையே குழப்பங்களையும், வீண் சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் அந்தக் கட்சிகள் குறிப்பிட்டுள்ளன.

கடந்த 50 வருட இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக ஏற்பட்டுள்ள சமாதான முயற்சிகள் பின்னடையக்கூடாது. இதுகுறித்து ஜனாதிபதிக்கும் ஏனைய கட்சிகளுக்கும் விளக்கமளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இந்தக் கட்சிப் பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே, இக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

## கிழக்கு நிலைமை குறித்துப் பேச்சு!

கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலை குறித்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இன்று பேச்சுவார்த்தை இடம்பெறும் என்று, முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக் குழுத் தலைவர் இன்று பதுமனைச் சந்திப்பார்!

(திருகோணமலை)

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர், திருமலை - சம்பூரில், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இன்று காலை 11 மணிக்கு இந்தச் சந்திப்பு நடைபெறும் என்று, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரகடோட்ரயர் தெரிவித்தார்.

கிண்ணியா - குரங்குப்பாஞ்சான் குளம் விவகாரமும், கிழக்கு மாகாண பாதுகாப்பு நிலைவரம் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்படவிருப்பதாக அவர் கூறினார்.

இந்தச் சந்திப்பில், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சனும் புலிகளின் சார்பில்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# படையினர் முழுஉஷார் நிலையில் எப்பொழுதும் இருக்கவேண்டும்!

## பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவிப்பு

(திருகோணமலை)

படையினர் முழு உஷார் நிலையில் எப்போதும் இருக்கவேண்டும் என்று, திருகோணமலைக் கடற்படைத்தளத்தில் இடம்பெற்ற - பயிற்சியை முடித்து வெளியேறிய கடற்படையினரின் - அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு உரையாற்றியபோது, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

திருகோணமலை பயிற்சிக் கல்லூரியில், அறுபத்தொரு கடற்படை அதிகாரிகளும், நாற்பது மாலுமிகளும் பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறினர். இவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட பின்னர், உரைநிகழ்த்திய அவர் -

சமாதான முயற்சிகள் நடைபெற்றுவரும் இந்தச் சூழலில், படையினர் உயர்ந்த பட்ச பொறுப்புணர்ச்சியுடனும், கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் - கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி மற்றும் உயர்மட்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## முதலாம் ஆண்டு நிறைவையொட்டி

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நடாத்தும்

## பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

*உயர்தரப் பிரிவு* - (க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள்)

*தலைப்பு* - '21 ஆம் நூற்றாண்டில் அறிவியலின் வளர்ச்சி'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
முன்றாவது பரிசு - ரூபா 1,000

*கீழ்ப் பிரிவு* - (க.பொ.த. சாதாரண தரமும் அதற்குக் கீழ் கற்பவர்களும்)

*தலைப்பு* - 'சூழல் மாசடைதலைத் தடுப்பதில் நமது பங்கு'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
முன்றாவது பரிசு - ரூபா 1,000

### நிபந்தனைகள்

- ✧ கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- ✧ கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு, அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- ✧ கட்டுரைகள் ஆகக் குறைந்தது 300 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
- ✧ கட்டுரைகளைத் தேர்ந்தெடுப்பதில் நடுவர்குழுவினது ஆசிரியரின் முடிவே இறுதியானது.
- ✧ கட்டுரைகள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

**போட்டி முடிவுதிகதி - 10.09.2003**



தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. திருப்பணிக்கு நிதி செலுத்த விரும்பும் அடியார்கள், ஆலய முகப்பில் அமைந்திருக்கும் திருப் பணி உண்டியல் மூலமாகவும், இலங்கை வங்கி பருத்தித்துறை கிளையில் சேமிப்பு கணக்க இல.16203 மூலமாகவும் செலுத தலாம். ஆலயத்தில் நேரடியாக அன்பளிப்புச் செய்ய விரும்புவோர், ஆலயத்தில் புதிதாக அமைந்துள்ள திருப்பணிக் காரியாலயத்தில் பொருளாளரிடம் நேரடியாகச் செலுத்தியும், திருப்பணிப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

**முக்கிய குறிப்பு:-** செல்வச் சந்நிதி ஆலய திருப்பணி நிதி சேகரிப்பதற்காக நாம் எவரையும் நியமிக்கவில்லை. எனவே எவரிடமும திருப்பணிக்காக நிதியினைச் செலுத்தவேண்டாமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.

(சி-1381) **' திருப்பணி நிர்வாகத்தினர்.**

## சின்னஞ்சிறு செய்திகள்

### கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கு!

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும், யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கான ஆங்கிலப் பரீட்சை, எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சையில் - அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு, தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கேட்டுள்ளார்.

### கொடியேற்றத் திருவிழா!

இருபாலை கிழக்கு- கேணிக்குளம் பகுதி அருள்மிகு லிங்கப்பிள்ளையார் மஹோற்சவம், நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

### எண்ணெய் வழங்க ஈரானிய அரசு இணக்கம்!

இலங்கைக்கு ஒரு வருடகால தவணைக் கொடுப்பனவின் அடிப்படையில், பெற்றோலியத்தை விநியோகிக்க ஈரானிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

ஈரான் ஜனாதிபதி முகமட் கத்தாமி, இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளார். வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணாண்டோ, ஈராக் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதையடுத்தே, இந்தச் சலுகையை வழங்குவதற்கு ஈரான் ஜனாதிபதி இணங்கியுள்ளார்.

### மதகுகள் சேதம்!

சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் - கென்ஸ்மன் ஒழுங்கைக்கு அருகாமையிலுள்ள மதகு ஒன்று உடைந்துள்ளது. இந்த மதகின் ஒரு பகுதியில், பாரிய துவாரம் ஒன்று காணப்படுகின்றது. இதனருகில் கற்களைப் போட்டு, கயிறுகட்டி மறைப்புச் செய்யப்பட்டுள்ளது. பாரிய வாகனங்கள் செல்லும் வேளையில், இந்த மதகு முற்றாக உடையக்கூடிய நிலை உள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. அத்தோடு, இதே வீதியில் - பெருங்குளம் சந்திக்கு அருகாமையிலுள்ள மதகு ஒன்றும் தூர்ந்து போயுள்ளதால், தண்ணீர் வயல்களுக்குள் உட்போகமுடியாமல் வீடுகளில் தேங்கி நிற்கின்றது.

இவ்விரு மதகுகளும், நீண்ட காலமாகச் சீர்செய்யப்படாததாலேயே, இந்நிலை தோன்றியதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

### கைதடியில் மஹோற்சவம்!

கைதடி - இணுக்கித் தோட்ட கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம், எதிர்வரும் 31 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி- தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறும்.

இந்த ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம், அடுத்த மாதம் ஏழாம் திகதி இடம்பெறவுள்ளது.


## சிறுவிளம்பரம்

### தட்டச்சு வகுப்புக்கள்

தமிழ், ஆங்கில தட்டெழுத்து வகுப்புக்கள் புதிய பிரிவு ஆரம்பம் 28-08-2003.

தொடர்பு- N.S.T.C.A, 8/1 அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-1377)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஸ்ரீகாந், த்ரிஷா நடித்த
மனசெல்லாம்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
JUDGE AND JURY
இரவுக் காட்சி. 8.45 (பு.நே)
(சி-1285)

ராஜா யாழ்ப்பாணம்.
28 ஆம் திகதி வரை
விஜயகாந், கிரண் விவேக் நடித்த
தென்னவன்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, (பு.நே)
29 ஆம் திகதி முதல்
பாய்ஸ்
(சி-1284)


## மங்கலம்சேர் சப்பறத்தில் வா!



பண்டைத் தலைநகராம் நல்லைவளர் கதிர்வேலா
விண்முட்டும் சப்பறத்தில் வா!

★ ★ ★

முகில்தவழும் மலைவளரும் உமையவளின் தவக்கொழுந்தே
முகில்முட்டும் சப்பறத்தில் வா!

★ ★ ★

முப்புரங்கள் எரித்தோனின் விழிவழியே உதித்தவனே!!
சப்பறத்தின் மீதிவர்ந்து வா!

★ ★ ★

பல்கலைகள் வளர்கின்ற வளநல்லை வளர்வேலா!!
மெல்லவரும் சப்பறத்தில் வா!

★ ★ ★

அடியவர்கள் புகழ்பாடும் நல்லைவளர் குமரேசா!
கொடியசையும் சப்பறத்தில் வா!

★ ★ ★

சங்கரனின் தவமகனே அம்பிகையின் குலமகனே!!
மங்கலம்சேர் சப்பறத்தில் வா!

★ ★ ★

அன்பர்துயர் துடைப்பவனே ஐங்கரனின் இளையவனே!
அழகொளிரும் சப்பறத்தில் வா!

★ ★ ★

மான்மகளை வலப்புறத்தில் இடம்தந்த மால்மருகனே!!
காண்டரிய சப்பறத்தில் வா!

★ ★ ★

அமரர்குலம் காத்தளித்துக் குஞ்சரியை மணந்தவனே
அசைந்துவரும் சப்பறத்தில் வா!

★ ★ ★

துன்பங்கள் தொடர்கதையாய்த் தொடர்கிறதேன் முருகையா
துடைத்தருளச் சப்பறத்தில் வா!

★ ★ ★

வளமான வாழ்வழிந்து வாடுகின்றோம் வடிவேலா!
வாழ்வொளிரச் சப்பறத்தில் வா!

★ ★ ★

செல்லப்பர் யோகரெனச் சித்தர்பலர் துதிசெய்த
நல்லைக்கு சப்பறத்தில் வா!

★ ★ ★

பதம்பட்டால் பலவினைகள் நீறாகும் நல்லைவளர்
குமரேசே சப்பறத்தில் வா!

★ ★ ★

உரிமைக்காய் உயிர்தந்த உத்தமரின் இலக்கினைக்கு
உயிர்கொடுக்கச் சப்பறத்தில் வா!

★ ★ ★

ஒருகால் நினைத்தவர்முன் இருகாலும் வருமெங்கள்
முருகோனே சப்பறத்தில் வா!

★ ★ ★

சரணமென் றுனையடைந்தோம் எமைக்காக்கும் தருணமிது!
சரவணனே சப்பறத்தில் வா!

**வயலூர் முருகன்**

## சங்கிலியன் ஆண்டமண்ணில் நல்லூரான் சப்பைரதமேறுகிறான்

சப்பை ரதமேறி நல்லூரான் வருகிறான்
சங்கிலியன் ஆண்ட மண்ணில் நல்லூரான் வருகிறான்
எப்போதும் எமைக்காக்கும் நல்லூரான் வருகிறான்
எழில் மயிலில் பறந்தோடி நல்லூரான் வருகிறான்
தப்பேதும் புரிந்தாலும் தயைகாட்டும் நல்லூரான் வருகிறான்
தமிழ் மக்களின் தலைவன் நல்லூரான் வருகிறான்
இப்போது எமக்கேற்ற தீர்வுகொண்டு நல்லூரான் வருகிறான்
ஈழ நல்லூர் வாழுகின்ற வடிவேலன் வருகிறான்

கோரிக்கை நிறைவேற்ற குமரன் வருகிறான்
குஞ்சரியர் சகிதமாய் குலம் காக்க வருகிறான்
நாடித்துதிப்பவரின் நலம் காக்க வருகிறான்
நல்லையை ஆள்பவன் சப்பைரதமேறி வருகிறான்
கோடி அன்பர்கள் குறைதீர்க்க வருகிறான்
கூவும் சேவற் கொடியோனாய் வருகிறான்
பாடிப் பரவிவிடும் பாலசுப்பிரமணியாய் வருகிறான்
பக்தர்கள் வடம்பிடிக்க சப்பைரதமேறி வருகிறான்

**காரை.எம்.பி.அருளானந்தன்**

## அருளைத் தா முருகா!

சித்திரப் பொன் மண்டமும் சீரடியார் தாள்பணிவும்
இத்தரணி போற்ற இலங்கிடுமே - வித்தகரே
கோல மயிலேறு முருகாவுனது பொற்பாதம்
சாலவுறவே யருளைத் தா.

நித்திய நைமித்தியங்கள் நெஞ்சினிக்க வேயமையும்
புத்தமுதக் கோயில் பணியடியார் நித்த நித்தம்
கூடிக் கனிந்த குரலோ டிசைப்பாரே
தேடும் திருவடியிற் சேர்.

**வ.சிவாஜி**
**காரணவாய் கிழக்கு**

## அரசாங்கத்துக்கு எதிராக

# ஜே.வி.பி. மாபெரும் பாத யாத்திரை காலியில் இருந்து இன்று ஆரம்பம்

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு எதிரான மாபெரும் பாதயாத்திரை ஒன்றை ஜே.வி.பி இன்று காலியிலிருந்து ஆரம்பிக்கவுள்ளது.

காலியிலிருந்து ஆரம்பமாகவுள்ள இந்த பாதயாத்திரை, எதிர்வரும் வியாழக்கிழமை கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் முடிவடையுமென்று - ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்றக் குழுத் தலைவருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இந்தப் பாதயாத்திரை மூலம், ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிராகத் தென்பகுதி மக்களின் கருத்துக்களைத் திரட்டமுடியுமென்றும், வடக்கு - கிழக்கை சமாதானத்தின் பெயரால் புலிகளுக்குத் தாரைவார்க்கும் அரசின் செயலை, மூவின மக்களுக்கும் இந்தப் பாத யாத்திரை மூலம் அம்பலப்படுத்தப் போவதாகவும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார்.

திஸ்ஸமகராம, அம்பாந்தோட்டை, மாத்தறை ஆகிய இடங்களிலிருந்து - பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஜே.வி.பி ஆதரவாளர்கள் இந்தப் பாதயாத்திரையில் கலந்துகொள்வதற்காகக் காலிக்கு வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பாதயாத்திரை முதலில் அம்பலாங்கொடையிலும் அடுத்து அளுத்கம மற்றும் பாணந்துறையிலும் தரித்துச் செல்லுமென்றும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தர்.

# ஒன்பது வயதுடைய நோர்வே சிறுமியின் இசைத்தட்டு செஞ்சோலையில் வெளியீடு



அர்ச்சனா

நோர்வேயைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒன்பது வயதான சிறுமியின் இசைத்தட்டு வெளியீட்டுவிழா-புதுக்குடியிருப்பிலுள்ள செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் நடைபெற்றது.

அர்ச்சனா என்ற இந்தச் சிறுமியின் பன்னிரண்டு பாடல்கள் அடங்கிய இந்த இசைத்தட்டு வெளியீட்டு விழாவில், கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் வே.பாலகுமாரன், கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் தங்கன், அன்பரசன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் செஞ்சோலை சிறுவர் இல்லச் சிறுமிகள், காந்தரூபன் அறிவுச்சோலை சிறார்கள் உட்பட பெண் போராளிகள் பலரும் பங்கேற்றனர்.

# ஒஸ்லோ மாநகரசபைத் தேர்தலில் ஈழத் தமிழர் ஒருவரும் களத்தில்

விடுதலைப் புலிகளின் சர்வதேச அமைப்பின் முன்னணிச் செயற்பாட்டாளர் ஒருவர், நோர்வேயின் மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாஸ்கரன் என்று அழைக்கப்படும் ராஜா பாலசிங்கம் என்ற புலிகளின் முன்னணிச் செயற்பாட்டாளரே, அடுத்தமாதம் நடைபெறவுள்ள நோர்வேயின் மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடவிருப்பதாகவும், இது நோர்வேயின் அரசியற் களத்தில் முக்கியமான மைல்கல் என்றும் குறிப்பிடப்படுகிறது.

நோர்வேயின் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியின் முக்கிய வேட்பாளராகவே பாஸ்கரன் தேர்தலில் நிறுத்தப்படவுள்ளார்.

இவர் நோர்வே குடியுரிமை பெற்றவர் என்பதால், ஒஸ்லோ மாநாகர சபைத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளார். ஒஸ்லோவில் கணிசமானளவு ஈழத்தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்களென்பது குறிப்பிடத்தக்கது.

ஒஸ்லோ மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள பாஸ்கரன், வன்னிக்கு வந்துசென்றவர் என்றும், புலிகளுடன் நேரடித் தொடர்புகளை வைத்திருப்பவர் என்றும் கூறப்படுகிறது.





இசைத்தட்டு வெளியீட்டு விழாவில் கேணல் தீபன் மங்களவிளக்கேற்றுவதை முதற்படத்திலும், புலிகளின் பிரமுகர் பாலகுமார், இளங்குமரன், தங்கன் ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படங்களிலும் காணலாம்.

## வவுனியா - மன்னார் பகுதிகளில்

# உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கு 54 மில்லியன் ரூபா நிதியுதவித் திட்டம்!

மன்னார், வவுனியா மாவட்டங்களில், உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணமளிப்பதற்கென - ஜேர்மன் குடியரசு 54 மில்லியன் ரூபாவுக்குச் சமமான உலா உணவுகள், விவசாய கருவிகள், விதைகள், வீடுகட்டுவதற்கான பொருட்கள் ஆகியவற்றை வழங்கவுள்ளது.

இந்த உதவித் திட்டத்தில் 35 கிணறுகளைச் சுத்தம் செய்தல், இரண்டு பாடசாலைகளைப் புனரமைத்தலும் அடங்கியுள்ளன.

2000 குடும்பங்கள் - தற்போது மனிதநேய அமைப்புக்களின் மூலம் கிடைக்கும் உதவியில் தங்கியுள்ளன. இவர்களுக்கான உதவிகளை, இலங்கையிலுள்ள 'சேவாலங்கா' அமைப்புடன், ஜேர்மனியிலுள்ள விவசாயம் கிராமிய முன்னேற்றம் மற்றும் எரிசக்தி வழங்குதல் தொடர்பான நிறுவனம் ஒன்றும் இணைந்து செயற்படவுள்ளது.

## நீதிமன்றத்தால் பொருட்கள் ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்ட நீதிமன்றத்தினால் கைப்பற்றப்பட்ட பொருட்கள்- நேற்றுமுன்தினம் ஏலவிற்பனை செய்யப்பட்டது.

மன்னார், முருங்கன் பகுதிகளில் சட்டவிரோதமாக மக்கள் வைத்திருந்த மோட்டார் சைக்கிள்கள், களவாடிய துவிச்சக்கரவண்டிகள், பொருளாதாரத் தடை நீக்கத்திற்கு முதல் கடல் வழியாகக் கொண்டுசெல்லப் பட்டபோது, கைப்பற்றப்பட்ட உதிரிப் பாகங்கள் என்பனவே நேற்றுமுன்தினம் ஏலவிற்பனை செய்யப்பட்டது.

# புலிகள் மீது பழி சுமத்துவதை நாம் அனுமதிக்கமாட்டோம்!

## அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா

அம்பாறை மாவட்டத்தில் நடந்த சம்பவங்களை இனங்காணாமல், உண்மைநிலையை அறியாமல் - விடுதலைப்புலிகள் மீது அபத்தமான பழி சுமத்தப்படுவதை நாம் அனுமதிக்கமாட்டோம்.

இவ்வாறு, இரண்டு முஸ்லிம்கள் காணாமல்போனமை தொடர்பாக, விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாபா தெரிவித்தார்.

நாட்டில் இன்றையநிலையில்-ஆயுதத்தால் சூழப்பட்ட கலாசாரம் தான் இருக்கிறது. நாம் ஆயுதம் இல்லாமல் அரசியல் செய்ய மக்கள் முன், வந்துள்ளோம். தமிழ்மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதிராகச் செயற்பட்டவர்கள் பலர், இன்று சுதந்திரமாக இருக்கின்றார்கள். நாம் கொலைக் கலாசாரத்தை விரும்புகின்றவர்கள் என்றால், இத்தகையவர்களை விட்டுவைத்திருப்போமா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

சில் அப்பாவி மக்களைத் தூண்டிவிட்டு, இலாபம்தேட முனைவதை நாம் அனுமதிக்கமுடியாது. ஆகவே, உண்மைநிலை தெரியாமல், எடுத்ததற்கெல்லாம் புலிகள் மீது பழி சுமத்துவதை நிறுத்தவேண்டும் என அவர் தெரிவித்தார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி அதிகரிப்பு!

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி-அடுத்த ஆண்டு முதல் ஒரு கோடி ரூபாவாகவும், மாகாண சபைகளுக்கான நிதி 50 லட்சம் ரூபாவாகவும் அதிகரிக்கப்படும் என்று நீதி அமைச்சரும், சபை முதல்வருமான டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தெரிவித்தார்.

மாகாணசபைகள், உள்ளூராட்சிச்சபைகள் சிறப்பான முறையில் இயங்குவதில்லை என்று, ஜே.வி.பி உறுப்பினர் ஹந்துன்கெத்தி நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

# சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. கூட்டணி இறுதிமுடிவு புதனன்று எடுக்கப்படும்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான அரசியல் கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பான இறுதியான முடிவெடுக்கும் பேச்சுவார்த்தை, நாளை மறுநாள் புதன்கிழமை நடைபெறுமென்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இருகட்சிகளுக்கும் இடையிலான அரசியல் கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பான பேச்சுவார்தைகள், நீண்டகாலமாக இடம்பெற்றுவருகின்றபோதும், சில முக்கிய விவகாரங்களில் இணக்கப்பாடு எட்டப்படாததால் - புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப்படுவதில் தாமதம் ஏற்பட்டுவந்தது.

தற்போதைய அரசியல் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, இருகட்சிகளுக்கும் இடையிலான கூட்டணி தொடர்பான பேச்சுக்களை நடத்தி, இறுதிமுடிவு எட்டப்படவேண்டிய அவசியமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார்.

# பொ.ஐ.முவில் இருந்து வெளியேற லங்கா சமசமாஜக் கட்சி ஆயத்தம்

## தேர்தலில் தனித்துப் போட்டியிடவும் ஆலோசனை

பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து லங்கா சமசமாஜக் கட்சி விலகிக்கொள்வது பற்றித் தீவிரமாக ஆராய்ந்துவருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி தேர்தல்களுக்கு முன்னதாக, பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து வெளியேறுவது குறித்து இந்தக் கட்சி தீவிரமான ஆலோசனைகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

அடுத்துவரப்போகும் மாகாண சபை, உள்ளூராட்சி தேர்தல்களில் தனித்துப் போட்டியிடுவது குறித்த சாத்தியப்பாடுகள் பற்றித் தாம் தீவிரமாகச் சிந்தித்துவருவதாக, லங்கா சமாசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் பட்டி வீரக்கோன் தெரிவித்தார்.

இந்தத் தேர்தலில், தமது கட்சியின் பொருளாதாரக் கொள்கையை முன்னிறுத்திப் பிரசாரங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பொதுஜன ஐக்கியமுன்னணி - ஜே.வி.பியுடன் அரசியல் கூட்டணி அமைக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளதாலேயே, பொ.ஐ.முவிலிருந்து லங்கா சமசமாஜக் கட்சி விலகிக்கொள்ள ஆலோசித்துவருவதாகக் கூறப்படுகிறது.

## பஸ்கட்டணம் அதிகரிக்கும்!

கொத்தணி பஸ் நிறுவனங்களின் பஸ் கட்டணத்தை அதிகரிப்பதற்கு இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை அனுமதி வழங்கியுள்ளது.

அடுத்தமாதம் முதல் வாரத்திலிருந்து கொத்தணி பஸ் நிறுவனங்களின் கட்டணத்தை 15 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

# பாடசாலை மட்டக் கணிப்பீடு; யாழ்ப்பாணத்தில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் பாடசாலை மட்டக் கணிப்பீடு சம்பந்தமான கருத்தரங்கு- எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை - யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில், வட - கிழக்கு மாகாண கல்வியமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கில்- யாழ்.மாவட்ட உயர்கல்வி அதிகாரிகள், அதிபர்கள், பிரதியதிபர்கள், பாடசாலை மட்டக் கணிப்பீட்டுப் பொறுப்பாசிரியர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

பரீட்சைத் திணைக்களத்தின் தமிழ்ப் பிரிவு ஆய்வு அபிவிருத்தி கிளையின் பொறுப்பாளரும், உதவி பரீட்சை ஆணையாளருமான ஏ.சொலமனால் ஒழுங்குபடுத்தப்பட்ட இக் கருத்தரங்கில், வள ஆய்வாளர்களாகப் பிரதிப் பரீட்சை ஆணையாளர்கள் ஆ.சிவலிங்கம், ஜி.போல் அன்ரனி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# இயந்திரங்கள் சீரில்லாத மினிபஸ்கள் சேவையில் ஈடுபடுவதற்குத் தடைவிதிப்பு

## போக்குவரத்து பொலிஸார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சீரானநிலையில் இல்லாத தனியார்மினிபஸ்கள், தொடர்ந்து சேவையில் ஈடுபடமுடியாதநிலை உருவாகியுள்ளது.

சீரானநிலையில் இயந்திரங்கள் இல்லாத வாகனங்களும், கதவுகள் பழுதடைந்த வாகனங்களும் தொடர்ந்து சேவையில் ஈடுபடத் தடை விதிக்கப்படவுள்ளதாக, யாழ்.பொலிஸ நிலையப் போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதேவேளை - புகை கக்கும் வாகனங்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் வண்டிகள் அனைத்தும் தமது வழிக்கான சேவை அனுமதிப் பத்திரத்தை வைத் திருக்கவேண்டுமெனவும், இவ்வாறு வைத் திருக்காத தனியார் மினிபஸ் உரிமையாளர்கள்மீது நடவடிக்கை எடுக்கப் படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.



மானிப்பாய் பரிஷ் லியோக் கழக உறுப்பினர்கள் - நவாலி அரசினர் மருத்துவமனையில் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (46)

## வலுவிழந்தவர்களுக்கு

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சக்கர நாற்காலிகள் வழங்கும்

(யாழ்ப்பாணம்)

பிரித்தானிய சைவத்திருக் கோயில் சபை ஒன்றியத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - வலுவிழந்தோருக்கு சக்கர நாற்காலிகளை வழங்கும் வைபவம், நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லை ஆதீன விருந்தினர் மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில், அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக - யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகம், யாழ்.மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த இனியவன், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வை.தியாகராசா ஆகியோர் கலந்துகொள்வர்.

### சிறுவர் அபிவிருத்தி நிலைய ஏழாம் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் ஏழாவது ஆண்டுவிழாவும், சிறுவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வும் நேற்று நாவலர் பாடசாலையில் முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் - சமூகசேவை திணைக்கள அதிகாரி எஸ்.சிவகணேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, சிறுவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

மனிதநேய ஒன்றியத்தின் தலைவர் எல்.பரமநாதனும் உரைநிகழ்த்தினார்.



சாவகச்சேரியிலுள்ள டிறிபேக் கல்லூரியில் மிதிவெடி அகற்றும் பணியில் 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்தினர் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம். (29)

## பதவி உயர்வுகளின்போது

# பாரபட்சம் காட்டப்படுவதாக தமிழ் பொலிஸார் முறைப்பாடு!

பதவி உயர்வுகள் வழங்கப்படும்போது - தமிழ்ப் பொலிஸாருக்குப் பாரபட்சம் காட்டப்படுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் சேவையில் நீண்டகாலம் சேவையாற்றியபோதும், பதவி உயர்வுகள் வழங்கப்படும்போது, தாம் புறக்கணிக்கப்படுவதாகத் தமிழ்ப பொலிஸார் கவலை தெரிவித்துள்ளார்

விளையாட்டுத்துறை சாதனைகள் கொண்டிருப்பதோடு, மும்மொழிகளிலும் தேர்ச்சியுள்ள தமிழ்ப் பொலிஸார் உள்ளபோதும், தனியே சிங்களமொழியில் மட்டும் தேர்ச்சியுள்ள பொலிஸாருக்குப் பதவியுயர்வுகள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் பொலிஸார் - விடுமுறையில் செல்வதிலும் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் கூறப்படுகிறது. பலாலி - இரத்மலானை சேவையில் ஈடுபடும் இராணுவத்தினருக்கான விமான சேவைகள் போதாதுள்ளதாகவும், அதனால- தனியார் விமானங்கள்மூலமாக அல்லது கடல் மார்க்கமாகவே பயணம் செய்யவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### திருவாவடுதுறை ஆதீன சுவாமியின் வரவேற்பு விழா

திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் - 23 ஆவது குரு மகாசந்நிதானம் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு நடத்தும் வரவேற்பு நிகழ்வு - இன்று காலை 9.30 மணிக்கு, நல்லை திருஞானசம் பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், வரவேற்புரையை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தைச் சேர்ந்த சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்துவார்.

### தொழில்நுட்பக் கல்லூரிக்கு விண்ணப்பம் கோரல்

தொழில்நுட்பக் கல்லூரிகளில் 2004 ஆம் ஆண்டுக்கான மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களைச் செப்ரெம்பர் 22 ஆம் திகதிக்கு முன்னராகத் தொழில்நுட்பக் கல்லூரி அதிபருக்கு, முகவரியிட்டு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ். மத்திய கல்லூரி அணி மாகாணமட்டத்தில் சம்பியன்!

(கொழும்பு)

இலங்கை பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற 'அஸ்ரா' வெற்றிக்கிண்ணத்துக்கான, 14 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கிடையிலான போட்டித் தொடரில் - யாழ். மத்திய கல்லூரி அணி - அநுராதபுரம் மத்திய கல்லூரி அணியை 25 ஓட்டங்களால் தோற்கடித்து, மாகாண மட்டத்தில் சாம்பியனானது.

அநுராதபுரம் மத்திய கல்லூரிக்கும், யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில், யாழ்.மத்திய கல்லூரி 9 விக்கட் இழப்புக்கு இருநூறு ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு ஆடிய அநுராதபுரம் மத்திய கல்லூரி - அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து, 175 ஓட்டங்களையே பெற்றது.

இப்போட்டியில் 66 ஓட்டங்களைப் பெற்ற யாழ்.மத்திய கல்லூரி மாணவன் செல்ரன் - முதன்மை வீரனாகத் தெரிவுசெய்யப்பட்டார். இதன் மூலம் யாழ்.மத்திய கல்லூரி அணி தேசிய மட்டச்சுற்றுப் போட்டிக்கும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

### வல்வெட்டித்துறை நகரசபைக்கு இரண்டு உழவு இயந்திரங்கள்

வல்வெட்டித்துறை நகரசபைக்கு இரண்டு உழவு இயந்திரங்கள் - நிகொட் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உழவு இயந்திரங்கள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின்- வேண்டுகோளின் அடிப்படையிலேயே நிகொட் நிறுவனத்தினால் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

# சின்னஞ்சிறு செய்திகள்

### இளவாலையில் பெண்கள் அமைப்பு அங்குரார்ப்பணம்

சமூகத்தில் பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பெண்களின் திறமைகள், ஆளுமை என்பவற்றை வளர்க்கவும் என, இளவாலை திருமறைக் கலாமன்றத்தில்- பெண்கள் அமைப்பு ஒன்று, திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட் திரு மரிய சேவியர் அடிகளாரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது.

### செல்வச்சந்நிதி திருப்பணிக் காரியாலய திறப்புவிழா

(நவிண்டில்)

தொண்டைமானாறு - செல்வச் சந்நிதி கோயில் திருப்பணி காரியாலயத் திறப்புவிழா - இன்று திங்கட் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். ஆலய பிரதம குருவினால் இக்காரியாலயம் திறந்துவைக்கப் படும் என, திருப்பணி நிர்வாகத்தினா தெரிவித்துள்ளனர்.

### சுற்றுலாத்துறை விபரங்கள் இணையத்தளத்தில்

வட-கிழக்கு பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு, வட-கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை சம்பந்தமான விபரங்களை, இணையத்தளத்தில் வெளியிடத் தீர்மானித்துள்ளது.

கலாசாரங்கள் பற்றி இணையத்தளத்தில் அனுப்ப விரும்புவோர்- தத்தமது பிரதேச கலாசார உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தொலைக்கல்வி வகுப்பு

பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான தொலைக்கல்வி வகுப்பு, எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 10 மணிக்கு, மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில், சகல பதவிநிலை உத்தியோகத்தர்களையும் கலந்துகொள்ளும்படி, பதில் அரச அதிபர் கேட்டுள்ளார்.

# வாகனத்தை திருத்திய சாரதி அதில் நெரிந்து பலியானார்!

(வடமராட்சி)

கனரக வாகனம் ஒன்றில் ஏற்பட்ட சிறுகோளாறுகளைத் திருத்த முயன்ற சாரதி, அவ்வாகனம் அவர் மீது ஏறியதால், பரிதாபகரமாக மரணமடைந்தார். இந்தச்சம்பவம் - நேற்றுமுன்தினம் மாலை 7 மணியளவில் வட்டக்கச்சி - புளியம்பொக்கணை வீதியில் இடம்பெற்றது.

வாகனத்தை இயக்கமுயன்ற வேளை, அதில் கோளாறு இருப்பதாக உணர்ந்த சாரதி, வாகனத்திலிருந்து இறங்கி திருத்த முற்பட்ட வேளை, வாகனம் அவர்மீது ஏறியதால், சாரதி அதேஇடத்தில் பலியானார்.

இச்சம்பவத்தில் வவுனியா-மகாஇறம்பைக்குளத்தைச் சேர்ந்தவரான வ.மகாலிங்கம் (வயது 48) என்பவரே பலியானவராவார். (17)

# இலங்கை அதிபர் பதவியினருக்கான வினைத்திறன் வழிகாட்டல் கருத்தரங்கு

(கிளிநொச்சி)

இலங்கை அதிபர் பதவியினருக்கான வினைத்திறன் தடைதாண்டல் வழிகாட்டல் கருத்தரங்கு - இன்றும், நாளையும் கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த சகல அதிபர்களையும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறும், கல்வி அமைச்சு தேசிய கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த அலுவலர்கள் மேற்படி பரீட்சை தொடர்பான கருத்துரைகளை வழங்கவுள்ளதாகவும் -

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாக செயலாளர் சி.சரவணபவானந்தனும், தமிழீழ கல்விக் கழகத்தினரும் தெரிவித்துள்ளனர். (17)

# இலக்கியச்சோலை

கொஞ்ச நேரத்தில் பஸ் புறப்பட்டது.

சில நிமிடங்களில் நித்திரை வந்துவிட்டது.

விடியத்தொடங்கியபோது, பஸ் மதுரையை நெருங்கிக் கொண்டிருந்தது. ஏற்கனவே சில தடவைகள் மதுரைக்கு வந்து, மதுரை மீனாட்சி அம்மன் கோயில், அழகர் கோயில், நாயக்கர் அரண்மனை பார்த்துப் பார்த்து இன்னமும் திருப்தி அடையாமல் இருந்தேன். மறுபடியும் இங்கு வரும் சந்தர்ப்பம் வந்துவிட்டது.

மதுரைக்குப் பக்கத்தில் 'விநாயகர் லொட்ஜில்' ரூம் எடுத்து தங்கினோம்.

ஒன்பது மணிக்குப் பின்தான், இங்கு கடைகள் திறக்கும். எனவே, அதுவரை உடம்பைக் கட்டிலில் ஓய்வாகக் கிடத்தினோம்.

எட்டு மணிக்குக் குளித்து, வசந்தபவனில் காலைச்சாப்பாடு முடித்து, குறித்த அந்தக் கண்ணாடி விற்கும் கடையை அடைந்தோம்

வெங்கிட்டுவிற்கு ஏற்கனவே தெரிந்த கடைதான். விலைபேசி

பின்னேரம் பேப்பர் படித்ததும், பயம் இன்னும் அதிகமானது. 'திருச்சி, மதுரை நகரங்களிலும் தீவிர சோதனை. இரவிரவாகப் பயணிகள் தங்கும் விடுதிகள், வாகனங்கள் சோதனை' ஒரே குழப்பமாக இருந்தது.

"என்ன சார்? நீங்க இங்க இருக்கிறதாலதான், நியூஸ் போடுறாங்க" வெங்கிட்டு வேறு என்னைக் கிண்டல் செய்தார்.

நாளைவரை காத்திருக்கவேண்டும். இங்கே சோதனை செய்ய வருவார்களா? வந்தால் என்ன கேட்பார்கள்?

"என்ன செய்கிறாய்? எப்போ வந்தே? படகிலா? அகதியாகவா? எந்த அகதி முகாம்? பாஸ்போட் இருக்கா? வந்து எவ்வளவு காலம்? ஏன் விசா முடிஞ்சதும் போகல? இந்தப் படத்தில் உள்ளவங்களத் தெரியுமா? ஏன் இங்க வந்தே?

கேள்விகள் தொடரும், சந்தேகம் அதிகமாகும். நான் சொன்னதை நம்புவார்களா? ஐயோ! முதலாளி வந்த கையோடு எல்லாவற்றையும் உதறிவிட்டுப் போயிருக்க வேண்டும். வேண்டாம் இந்தச் சோதனை.

"சார், சார்!" என்று பலமுறை அழைத்த பின்தான், சுயநினைவிற்கு வந்தேன். "என்ன யோசனை? நாளைக்குச் சாயங்காலம் சென்னைக்குப் புறப்பட்டுப் போறீங்க. நான் வானில வந்திடுவன். எல்லாத்துக்கும் பயந்து சாகிறீங்க. நல்ல ஆள்தான் நீங்க"

அங்கு சிதம்பரம் யோசிப்பார். மற்றவர்கள் என்ன கதைப்பார்கள்? கற்பனை செய்யமுடியவில்லை. திட்டித் தீர்ப்பார்கள். எல்லாம் எங்களாலதான் என்று நச்சரிப்பார்கள்.

நான் அங்கு இல்லாதது, ஒரு விதத்தில் நல்லது. வெங்கிட்டு



முடித்து, நாளை மறுநாள் தருவதாகக் கூறினான்.

கண்ணாடிகளைக் கவனமாகச் சிறிய 'வானில்' அனுப்பிவிடலாம் என்று சொன்னார்.

வெங்கிட்டு தான் வானில் வருவதாகவும், என்னை பஸ்சிலே போகும்படியும் சொன்னான்.

"வீட்டில அம்மா உம்மைப்பத்திப் பேசினபடிதான். பாவம் என்ன செய்கிறீரோ என்று வருத்தப்பட்டார்"

"நான் காலைல 5 மணிக்கே வந்திட்டன். ஊரில இருந்து வந்த கடிதத்தைப் படிச்சதிலை, ஒரே தலையிடியாகக் கிடந்தது. பனடோல் போட்டிட்டு மறுபடி படுத்திட்டன்."

"தபாலில என்ன எழுதியிருக்காங்க?"

"முதலாளி தான் எழுதியிருக்கிறார். படிச்சுப் பாரும்"

சிதம்பரம் தயங்க, 'படியும்' என்று நான் உரிமையுடன் கடிதத்தைக் கொடுத்தேன். சிதம்பரம் படித்துவிட்டு என்னைப் பார்த்தார்.

"உமக்கு இவங்களைத் தெரியுமா?"

"ஓமோம். நான் முந்தி ஊரில் இருக்கும்போது பார்த்திருக்கிறன். நல்ல மனுசன். வாத்தியாரா இருந்தவர். பெடியங்களும் பழகிறத்துக்கு நல்ல ஆக்கள்.

கடைசியில் இப்படியாப் போச்சு"

"ஏன் நீர் வந்தமாதிரி, பிளேனில வரஇயலாதா?"

"அந்த அமளியில, இது நடக்கிற காரியமோ? யாழ்ப்பாணத்திலை இருந்து கொழும்புக்கு வரவேணும். இப்ப எல்லோரும் படகிலதான் வருகினம். பிரச்சினை எண்டவுடன், இவையும் சனத்தோட வெளிக்கிட்டிருக்கினம். வாத்தியாருக்கு என்னுடைய மாம்பலம் விலாசம் தெரியும். வந்திருந்தால், வந்திருப்பினம் எண்டு முதலாளி எழுதி இருக்கிறார். எப்பிடி உறுதிப்படுத்துகிறார்கள் - கடலிலதான் போயிருப்பினமெண்டு?

"எனக்கு ஞாபகமிருக்கு. பேப்பரில பார்த்தேன் - "அகதிகள் வந்த படகு மூழ்கி, 20 பேர் பலி" என்று கிடந்திச்சு. அதான் யோசிக்க வேண்டியிருக்கு"

கொஞ்ச நேரம் இருவரும் பேசாமல் இருந்தோம். தாய், தந்தை, இரண்டு ஆண்பிள்ளைகள். அங்கே இருந்தால் உயிர் தப்பி இருப்பார்களா? சொந்த மண்ணைவிட்டுக் கடைசியில நடுக்கடலில் உயிர் விடுவதுதான் தலைவிதியா? யாரிடம் சொல்வது?

"லெட்டரைப் பார்த்தா, உம்மோட முதலாளி இப்போதைக்கு இங்க வரமாட்டார் போலிருக்கே." சிதம்பரம் கேட்டார்.

நான் தலையசைத்தேன்.

"சிதம்பரம் - நான் இல்லாதபோது, சனங்கள் என்ன கதைச்சாங்கள்?"

"வழக்கம்போல உங்கட சனங்களை நம்பக்கூடாது என்று பேசினாங்கள்"

சிதம்பரம் என்னை ஆறுதற்படுத்தினார்.

அமைதியாக இருக்கமுடியுமா? முதலாளி எப்பதான் இங்க வரப்போறாரோ?

பஸ் வேலை முடித்து, ரெடியாக வேண்டும். இடையிலே காசுப் பிரச்சினை தலை தூக்கி நின்றது. செட்டியாரைப் பிடிக்க வேண்டியதுதான். பணம் வாங்கினால், பின் அந்தப் பணத்தைப் பெறுவதற்காகப் பஸ் கணக்கிலே கை வைப்பார். வீட்டு வாடகை ஒழுங்காகப் போவதனால், அவர் வீட்டிற்கு வருவதில்லை. நாள் தவறினால் ஆள் வந்திடுவார்.

எல்லாவற்றையும் சமாளித் தாகவேண்டும். பிறகு சந்திப்பதாகக் கூறி, சிதம்பரம் விடைபெற்றுப் போய்விட்டார்.

காலை வேலைகளை முடித்துவிட்டேன். கீழே இறங்க மனம் தயங்கியது.

எக்மோர் போய், வெங்கிட்டைப் பார்த்தாகவேண்டும்.

இரவு சிதம்பரத்தின் வீட்டிலே ரீவி பார்த்துக் கொண்டிருந்தபோது, செய்தியறிக்கைகளில் அவர்கள் அறிவித்தலைக் கேட்டதும், உடல் சுருங்கிவிடுவதுபோல உணர்ந்தேன். சிதம்பரம் வீட்டில் எல்லோரும் அமைதியாக இருந் தார்கள்.

தமிழ்நாட்டிலே வசிக்கும் இலங்கைத் தமிழர்கள் அனைவரும் தங்கள் பெயர்களை அருகிலுள்ள காவல் நிலையங்களிலே பதிவு செய்யவேண்டும். அவர்களுக்குத் தங்க இடம் கொடுத்த வீட்டு உரிமையாளர்களும், அதுபற்றி அறிவிக்க வேண்டும். பதிவு செய்யத்தவறும் இலங்கைத் தமிழர்கள் கடுமையாகத் தாக்கப்படுவர்!

செய்தி முடிந்தாலும், அது என் காதில் ஒலித்துக்கொண்டிருந்தது.

"என்னப்பா? பொலிசில பதியச் சொல்றாங்களா?" சிதம்பரத்தின் அம்மா கவலையுடன் கேட்டார்.

"நல்லதுதான். பதிஞ்சிட்டாப் பிரச்சினை இல்லை" சிதம்பரத்தின் அப்பா கூறினார்.

அங்கம்-5

# எனது ஊரிலும் தான்

## நாவல்

நானும் உடன் வருவதாகச் சொன்னேன்.

"வேணாம் சார். கண்ணாடியோட வண்டி நல்ல வெயிட்டா இருக்கும். முன்னால இருந்து வரமுடியாது. நீங்க பஸ்ல போயிருங்க"

சரி இனி அடுத்த வேலை என்ன?

மதியம் சாப்பிட்டுவிட்டு, நன்றாகத் தூங்கினோம்.

பின்னேரம் மெல்ல ரவுணைச் சுற்றினோம். கொஞ்சம் டிபன் சாப்பிட்டுவிட்டு, ரிக்சோவில் ஏறி, மதுரை மீனாட்சி அம்மன் கோயிலை அடைந்தோம்.

ஒவ்வொன்றையும் பார்க்கப் பார்க்க எப்படி முடிந்தது? என்ற கேள்வியே எழுந்து நின்றது. பார்க்க அலுக்கவில்லை. பின்னேரத்தை அப்படிக் கழித்துவிட்டு படம் பார்த்து இரவைக் கழித்தோம்.

காலை வெங்கிட்டுவைப் பேப்பர் வாங்கி வரும்படி சொனனேன். சற்றுநேரத்தில் வேகமாக வந்து வெங்கிட்டு,

"சார் பேப்பரைப் பாருங்கள்" என்றபடி பேப்பரை எனக்கு முன் போட்டார்.

தலைப்புச் செய்தியைப் பார்க்க மனம் திடுக்குற்றது.

"சென்னையில் பொலிஸ் தேடுதல் வேட்டை தீவிரம்... இலங்கைத் தமிழர்கள் தங்கும் பகுதிகள், விடுதிகள், வீதியிலே செல்லும் வாகனங்கள் தீவிர சோதனை. தப்ப முடியாதவாறு தீவிர பாதுகாப்பு."

தொடர்ந்து படிக்க முடியவில்லை. தேடுதல் வேட்டை தீவிரம் என்றால் - எல்லா இடங்களிலும் சோதனை செய்வர்கள். சந்தேகத்தின் பேரில் உள்ளே தள்ளுவார்கள். இனி என்ன செய்வது? படுக்கையில் விழுந்துவிட்டேன்.

சி. கதிர்காமநாதன்

"என்ன சார் பயந்திட்டீங்களா? இப்படித்தான் முன்னமும் நடந்தது. ஒரு நாளைக்கு இப்படிப் பெரிசா நியூஸ் வரும். பிறகு சரியாயிடும்"

வெங்கிட்டு சாதாரணமாகச் சொல்லிவிட்டார். காலையில் எந்த வேலையும் செய்யவில்லை. வெங்கிட்டும் என்னை விட்டபாடில்லை. வெங்கிட்டுவிற்குச் சிரிப்பு வந்தது.

"எந்திரிங்க சார். குளிச்சுச் சாப்பிடலாம். பசி உயிர் போகுது. இத இப்படியே விட்டிருங்க"

றோட்டில் நடக்கக் கூச்சமாக இருந்தது. உரத்துக் கதைக்கமுடியவில்லை.

என் பேச்சுக் காட்டிக் கொடுத்துவிடுமோ?

இருக்கும் தைரியத்தில் மனது கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

மறுநாள் - சொன்னமாதிரிக் கடை முதலாளி எல்லாவற்றையும் தயார்படுத்திவிட்டார். "சார் நான் வானில போயிடுறன். இரவு வண்டியில வந்திடுங்க"

வெங்கிட்டு கிளம்பிவிட்டான். ரூமுக்கு வந்து யோசித்துக் கொண்டிருந்தேன். இரவு எப்போது வரும்?

சென்னைக்குப் புறப்படும் பஸ்சில் ஏறி உட்கார்ந்த பிறகே, மனப்பதற்றம் குறையத்தொடங்கியது. என்பக்கத்தில் இருந்தவர் அடிக்கடி என்னோடு பேசமுயன்றார். நான் விளங்காதது போல நடித்துக்கொண்டேன்.

எதற்காக வாயைக் கொடுத்து, வம்பில் மாட்டிக்கொள்ள வேண்டும். பஸ் நிரம்பி வழிந்தது. கொஞ்ச நேரத்தில் ரீவியில் படம் போட்டார்கள். மனம் அதில் லயிக்கவில்லை.

இப்படி எத்தனை நாளைக்குப் பயந்திருப்பது? எங்களுக்கென்று சொந்தமான, சுதந்திரமான இடம் கிடைக்கும்வரை, இந்தநிலை தொடரவேண்டியதுதானா? ஊரிலே கஷ்டமோ, நஷ்டமோ, குண்டு மழை பொழிந்தாலும் மறுத்துச்சொல்ல முடியாதவொரு மனநிம்மதி இருக்குமே! அது இங்கு இப்போது இல்லை. எதைத் தேடி வந்தேனோ, அது இல்லை. இடையிலே தேநீருக்காக வண்டியை நிறுத்தினார்கள். நான் இறங்காமல் இருக்கையுடன் ஒட்டிக்கொண்டிருந்தேன். ப்ளாட்டில் உள்ளவர்கள் நித்திரை விட்டு எழுமுன் போய்விடலாம். கொஞ்சம் நிம்மதியாகப் படுக்கலாம்.

நித்திரையும் விழிப்புமாக இரவு கடந்தது. தி.நகரில் 5 மணிக்குப் பின் என்னை இறக்கிவிட்டுப் போனார்கள். விரைந்து சென்று என் அறையை அடைந்து, கதவைத் திறந்தேன்.

காலடியில் ஒரு கடிதம் தட்டுப்பட்டது.

சட்டென்று விழிப்பு வந்தபோது, வாசல் மணி அழைத்துக் கொண்டிருந்தது. மணிக்கூட்டினைப் பார்த்தேன். நேரம் ஒன்பது மணி. உடன் எழுந்து வந்து கதவைத் திறந்தேன்.

சிதம்பரம்.

மனத்தினுள் இருந்த கலக்கங்கள் மெல்ல மெல்லக் குறையத்தொடங்கின. கைகளைப் பிடித்து இறுக்கியபடி, கதிரையில் இருக்கச்செய்தேன்.

"சிதம்பரம் எப்படி இருக்கிறது நிலமை?"

"பிரச்சினை இல்லை." இரவில் செக்கிங் நடக்குது. லொட்ஜலே கடுமையான செக்கிங். நீ இரவில் போகாம இருந்தாச் சரி"

நான் மௌனமாக இருந்தேன்.

கதை மாறி மாறி வளர்ந்தது. எனக்கு எதுவும் மூளையில் ஏறவில்லை. சிதம்பரம் வீட்டில் இல்லை. ஏதோ அலுவலாகச் சிதம்பரத்தின் வீட்டிற்கு வந்த ஸ்ரீராமின் அப்பா, என்னைப் பார்த்தார்.

"என்ன நியூஸ் கேட்டீங்களா?"

நான் பதில் பேசாது அவரைப் பார்த்தேன்.

"பதியாம இருந்திடாதீங்க. ஒண்டியா இருக்கிறீங்க. அப்புறம் சிக்கலாயிடும்" அவர் போய்விட்டார்.

சிதம்பரத்தின் அப்பா என்னைப் பார்த்துச் சிரிப்பதுபோலத் தெரிந்தது.

"உங்கிட்ட நல்ல அக்கறைதான்" என்றார்.

சிதம்பரம் வரும்வரை இங்க இருக்கவேண்டியதுதான் அல்லது மரத்தடிக்குப் போய்விடுவோமா? வேண்டாம், அங்கு போனால் இதைத்தான் துளைத்தெடுப்பார்கள் என்று எண்ணினேன்.

பொலிசில் என்ன பதியப்போகிறார்கள்? எப்போது வந்தது? எங்க தங்கியிருப்பது? என்னவேலை? என்று கேள்விகள் நீண்டு செல்லும்.

(தொடரும்)

## கைப்பொம்மை

நேற்றை இரவு நிறைந்தது கனவுகளால்.
தூக்கத்தைக் கைப்பற்றித்
தோற்றத்தில் நிஜம்போல
நான் மயங்க வைத்து யதார்த்தப் பொழுதொன்றாய்
என்னைக் கனவுகள்
எங்கெங்கோ கொண்டு சென்று
தொப்பொன்று காலையிலே பாயில் எறிந்தனவாம்.
அன்னப் பறவை இரண்டின் அலகிற் சுமபட்டு
பிடிநழுவிப்பாதியிலே
வீழ்ந்த ஆமை போல் நொந்தேன்.
விழுந்தெழுந்து விழிகள் கசக்கித் திருதிரென்று
முழித்தேன்;
துண்டு துண்டாய் முழுக்கனவும்
எண்ணத்திற் தொடர்பு இல்லாத காட்சிகளாய்
பாதை தனைமறைத்து
ஏதோ சில விம்பம்
தூரத் தெரிவதுவாய் தெளிவற்றுத் தெரிகிறது!
கனவுகளின் கைப்பொம்மை யாகப்
புரண்டிருந்த
எனை எனது கட்டுக்குள் கொண்டுவந்தேன்.
உறக்கத்தின்
பாதியினைப் பந்தாடி
அலைந்த கனவுகளை
எவையென்று தெளிவதிலே
'விழிபொழுது' கழிகிறது.



கு.ஜெயசீலன்

# கவிதைச் சோலை

## ஓரிடம்



தூரத்திலோர் புள்ளியென் விழிகளுக்குத்
தோன்றி மறைந்திற்று.
மீண்டுமப் புள்ளியின்பால்... ஓரீர்ப்பென்
மனதினிப் புகுந்ததன் மகத்துவமறியலானேன்.
இதனிடையே தோன்றிமறைந்தவப்புள்ளி
இந்நாளிலோர் கோளாக வியாபித்து
அதிற் பிறந்த முதல் மனிதனாய்.... நான்.
எனது இயக்கத்துக்கான மூலமாய் அது.

தொட முடியாத தூரத்தில்...
விழிகளுக்கு மட்டுமே தெரிந்த காலங்களில்...
மாற்றமொன்றும் எண்ணவில்லை.
நான் எப்போது 'நீல் ஆம்ஸ்ரோங்' காய் மாறினேனோ.
அன்றிலிருந்து எண்ணுள் ஏதோ?
பற்பல மாற்றங்கள் உதயமாகலாயிற்று.
அம்மாற்றங்களே இப்போதென்னை,
வனாந்தரவெளிகளில்... இட்டுச் செல்கிறது.
ஆனாலும்...
பயணங்களாக அவை நிகழவில்லை.
எப்போதோ வோர்நாள் நிகழவிருக்கும் அந்நிகழ்வை மட்டும்
இப்போதெனக்கு நினைவுபடுத்திக்கொண்டிருக்கிறது.
இப்போதுநான் எனக்கான இடத்தில்...
இல்லாவிட்டாலும்; நாளை
எனக்கான இடத்திற்தான் இருக்கப்போகிறேன்.
என்னுணர்வை ஆட்கொண்ட அச்சிறியபுள்ளி
கோளாகவே இருக்கப் போகிறது.
நான் இருக்கப் போவது...
அதிற் பிறந்த முதல் மனிதனாய்... மட்டுமல்ல.
அதிலிறந்த முதல் மனிதனாயுந்தான்!

சு.க.சிந்துதாசன் - பொலிகையூர்

## கிழக்கும் மேற்கும்

### மூன்றாம் செழியன் - செல்வி நைற்றிங்கேல்



அவரின்நோயின் கடுமையைக் கண்டோர்
தாயகம் திரும்பிட அறிவுரை கூறினா!
தாதிப்பணியினை உயிரெனக் கொண்டதால்
தம்பணி தொடர்ந்த செல்வி நைற்றிங்கேல் -
தாயகம் திரும்பினார் - யுத்தம் முடிந்ததும்!
தாதிப் பணியினில் அவர்பெற் றிருந்த
அறிவு அனுபவம் ஆற்றலை அறிந்துகொண்ட
பிரித்தானிய அரசு தலைமை ஆலோசகராகப்
பதவி வழங்கி அந்நாட்டில் உள்ள
வைத்திய சாலைகளில் சீர்திருத் தங்களினை
விரும்பிச் செய்தது! விரைந்து செய்தது!!
புனித தோமையர் வைத்திய சாலையில் -
"நோயுற்ற வர்களைப் பராமரித்தல்"
"நோய்கள் வராது தடுத்தல் காத்தல்"
"உடல் நலத்தைப் பேணுதல்" எனும் மூன்று
கொள்கை அடிப்படையில் தாதியர் களுக்கு
முதன் முதலாகப் பயிற்சிதரும் நிலையத்தைத்
தொடக்கி வைத்த செல்வி அவர்களை -
"தாதிச் சேவையின் அன்னை" என்றும்
"விளக்கேந்திய பெருமாட்டி" என்றும்
இன்றும் என்றும் உலகம் புகழுதே!
ஆங்கிலக் கவிஞராம் "லோங்பெலோ" என்பவர்
"சாந்த பிலோமினா" எனும் தம் கவிதையால்
செல்வியைப் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார்!
இவரின் தந்தை வில்லியம் நைற்றிங்கேல்!
இத்தாலியில் உள்ள "புளோரன்ஸ்" நகரில்
இவர் பிறந்ததனால் "புளோரன்ஸ் நைற்றிங்கேல"
எனப் பெயர் பெற்றிட்ட எம் செல்வி அவர்கள்
தொண்ணூறு ஆண்டுகள் வாழ்ந்தபின் மறைந்தா!!

போர்களில் விழுப்புண்கள் பெற்றதன் வீரரைப்
போற்றிக் காத்துச் சுகம் செய்து - கிழக்கிலே
தாதிச் சேவையைத் தொடக்கி வைத்தான் -
தலையலங் கானத்துச் செருவென்ற செழியன்!!
"கிரிமியப்" போர்க் களத்தினிற் காயங்கள்
அடைந்த வீரரைப் போற்றிய வேளையில்
தாதிச் சேவையை வளர்க்கத் தொடங்கினார்
"தாதியர் தாயாம்" நைற்றிங்கேல் - மேற்கிலே!!
மூன்றாம் செழியன் தாதியர் தந்தையாம்!
செல்வி நைற்றிங்கேல் தாதியர் தாயாம!!
தாதியர்க் கெந்நாளும் நோயாளர் சேயாவர்!
நோயாளர்க் கெந்நாளும் தாதியர் தாயாவர்!!

❖

முருகு

இலக்கியச்சோலையில் உங்கள் ஆக்கமும் இடம்பெற வேண்டுமா? சிறுகதைகள், கவிதைகள், மற்றும் படைப்புக்களை எழுதி எமக்கு அனுப்பிவையுங்கள்.

## நூல் அகம்

### மனிதத்தைத்தேடி...



நெடுந்தீவு மகேஷ் எழுதிய "மனிதத்தைத்தேடி" என்ற பெயரிலான கவிதைத் தொகுதி ஒன்று வெளிவந்துள்ளது. 1987 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், இலங்கையில் இருந்து வெளியாகும் பெரும்பாலான பத்திரிகைகளுக்கும், சஞ்சிகைகளுக்கும் எழுதிய கவிதைகளின் தொகுப்பாக இக்கவிதைத் தொகுப்பு விளங்குகின்றது.

கவிதைகள் - அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற ஒழுங்கில் தொகுக்கப்பட்டிருக்கின்ற தன்மையைக் காணமுடிகின்றது. பெரும்பான்மையான கவிதைகள் - ஓசைச சிறப்பு உடையனவாக, மரபுக் கவிதைகளாக அமைகின்றன. எனினும், புதுக்கவிதைகளையும் எழுதியுள்ளமையும் காணமுடிகின்றது.

'பூக்க விதைத் தேனிந்தப்
பூவிதனைப் புதிதாக்கும்
பூக்க விதைத்தேன் தேன்படையல்
பூந்தமிழாள் நெஞ்சமெல்லாம்
பூக்க விதைத்தேன் நலங்கள்
பூரிக்க பூக்கட்டுமே'

இவ்வாறு முதல் கவிதை ஆரம்பமாகின்றது. 'மனிதத்தைத்தேடி' என்ற பெயர்வரக் காரணம் - கவிதைத் தொகுதியைப் படிக்கும்போது புரிகின்றது. இவ்வுலகில் காணாமல் போன மனிதத்தை, கவிஞர் தேடுவதாகப் பாடல்கள் அமைந்திருக்கின்றன.

தமிழ் வாழ்த்தோடு ஆரம்பமாகி, அன்னையையும் தந்தையையும் விளித்துப் பாடுகின்றார் கவிஞர். உலகில் பேய் என்பதே கிடையாது. மனிதர்களின் அகத்தே இருக்கும் சாதிப்பேய், லஞ்சப்பேய், காமப்பேய் என்பனவே உலகில் உள்ளன எனக் கவிஞர் கூறுகின்றார்.

பொருளுள்ள காலத்தில் சேரும் உறவுகளையும், அது இல்லாதபோது, விலகி ஓடும் அதே உறவுகளையும் சுட்டிக் காட்டி, பொருள் ஈட்டவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றார்.

துன்பங்கள் தொடரும்போது, அத்துன்பங்களை எதிர்த்து வாழவேண்டும். நடுநிலைமை தவறாத வாழ்வுவேண்டும் எனக் குறிப்பிடுகிறார் கவிஞர்.

நல்லவன், கெட்டவன் என்ற வரையறைகள் - ஒருவன் செய்யும் செயல்கள் மூலமாகவே வருகின்றன. ஒருவன் இருக்கும்போது, வாழ்த்தாத உலகம் - இறந்த பின்னர் வாழ்த்துகின்ற போலித்தனங்கள் கூடாது என்ற கருத்தமைந்த கவிதைகள் - மனிதத்தைத்தேடி கவிதைத் தொகுதியில் இடம பெறுகின்றன.

இந்துப் பண்டிகைகள் தொடர்பான கவிதைகளோடு, கிறிஸ்தவ சமயம் சார்ந்த கவிதைகளும் இக்கவிதைத் தொகுதியில் இடம்பெறுகின்றன.

சங்கச் செய்யுள்களின் பொருள்மரபைக் கையாண்டு, அகப்பாடல் - புறப்பாடல்களையும் கவிஞர் இயற்றியுள்ளார்.

'சீதனம் எதுக்கடி' என்ற கவிதை, பெண்கள் சிரித்தால் முத்துசேரும்,அங்கம் அசைந்தால் ஆயிரம் சேரும் - பின்னர் ஏன் சீதனம் என்ற கேள்வியைத் தருகின்றது.

புறப்பாடல்கள் - புறநானூற்றுப் பாடல்களின் விளக்கப் பாடல்களாக அமைகின்றன.

விளையாட்டு, ஒற்றுமை உணர்வு முதலிய கவிதைகளையும், தேசியம் பற்றிய உணர்வையும், இனப்பிரச்சினை தொடர்பாகவும், அதனால் மக்கள் படும் துயரங்கள் சம்பந்தமாகவும் இக்கவிதைத் தொகுப்பில் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

'பிள்ளையார் பிடித்தோம்
குரங்குகள் தான் வந்தன
இப்பொழுது
குரங்குகள் தான் பிடிக்கின்றோம்
ஏனென்றால்
எங்களுக்கு ஒரு
பிள்ளையார் வேண்டும்'

இக்கவிதை வெளிப்படுத்தும் உணர்வு - சிந்தனையைத் தூண்டுவதாக அமைகின்றது.

வீடு தொடர்பான கவிதைகள் சில, இக்கவிதைத் தொகுதியில் இடம் பெறுகின்றன. போரினால் வீடுகளை இழந்து அறைகளில் வாழும் அவலநிலை, வீடிழந்த உண்மை தெரியாமல், திறப்புக் கோர்வையோடு திரியும் இடம் பெயர்ந்தோர் அவலம் என்பனவற்றைக் கவிதை வடிவில் காண்கின்றோம்.

பேனாட்ஷா, பாரதி முதலிய அறிஞர்களைப்போற்றும் கவிதைகளும் மனிதத்தைதேடி கவிதைத்தொகுதியில் இடம்பெறுகின்றன.

மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் ஊடகங்களில்- கவிதையைப்போலொரு சிறந்த கலைவடிவம் இருக்கமுடியாது என்பதற்கு - 'மனிதத்தைத்தேடி' கவிதைத் தொகுதியும் ஒரு சான்றாக அமைகின்றது.

நகுலன்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*கூழும் குடியும் ஒருங்குஇழக்கும் கோல்கோடிச்*
*சூழாது செய்யும் அரசு*

*- திருக்குறள்*

# நமது நோக்கு

## குட்டையைக் குழப்புகிறாரா?

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குரங்குப்பாஞ்சானில அமைந்துள்ள புலிகளின் முகாமை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, கடந்தவார இறுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் முப்படைகளினதும் தளபதிகளுக்கு இந்த உத்தரவை ஜனாதிபதி வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. குரங்குப்பாஞ்சானிலுள்ள புலிகளின் முகாமை அகற்றுவதற்கு எத்தகைய நடவடிக்கையையாவது மேற்கொள்ளும்படி அவர் தனது உத்தரவில் கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகா நாட்டின் நிறைவேற்று அதிகாரம் படைத்த ஜனாதிபதி மட்டுமல்ல, முப்படைகளினதும் பிரதம தளபதி என்ற அதிகாரத்தையும் தம்வசம் வைத்திருப்பவர். இன்னொரு நாட்டின் மீது போர்ப்பிரகடனம் செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கே, இலங்கை அரசியலமைப்பு வழங்கியிருக்கிறது.

குரங்குப்பாஞ்சான் முகாமை அகற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி, சந்திரிகா விடுத்திருக்கும் உத்தரவின் பின்னணி, ஆபத்தானதொரு விடயமாகவே கருதப்படுகின்றது. இந்த உத்தரவை அரச படைகள் செயற்படுத்த ஆரம்பித்தால் - அதன் விளைவுகள் மிகவும் மோசமானதாகவே இருக்கக்கூடும்.

குரங்குப்பாஞ்சானில் புலிகளின் முகாம் நீண்டகாலமாகவே இருந்து வருகிறது என்ற புலிகளின் தரப்பு நியாயப்பாட்டை, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஏற்க மறுத்துள்ளது. இந்தக் காரணத்தையே வைத்துக் கொண்டு, மீண்டுமொரு போரை உருவாக்கி, நாட்டை இரத்தக்களரிக்குள் கொண்டு செல்ல, சந்திரிகா எத்தனிப்பதாகவே பரவலாகக் கருத்து நிலவுகிறது.

குரங்குப்பாஞ்சான் விவகாரத்தில், விடுதலைப் புலிகள் சற்று விட்டுக்கொடுக்காத போக்கில் இருக்கின்ற நிலையில், இந்த விவகாரத்தைக்கையாள முடியாத போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மேல் நடவடிக்கையை நோர்வேயிடம் ஒப்படைத்துள்ளது.

நோர்வே அரசாங்கமே - அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து கலந்துரையாடி முடிவெடுக்கவேண்டிய நிலையில், ஜனாதிபதி சந்திரிகா - கண்காணிப்புக்குழுவின் அறிக்கையைக் காரணங்காட்டி, முகாமை அகற்றுவதற்கு உத்தரவிட்டுள்ளார். இது அவரது அரசியல் தளம்பல் போக்கை வெளிப்படுத்தியுள்ளது.

முன்னர், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு புலிகளின் எடுபிடிகளாகச் செயற்படுவதாகவும், அவர்களுக்குச் சாதகமாக- பக்கச்சார்புடன் செயற்பட்டுவருவதாகக் குற்றஞ்சாட்டி வந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க- இப்போது கண்காணிப்புக்குழுவின் விசாரணை முடிவை வைத்துக்கொண்டு, புலிகள் மீதான போரைத் தொடங்க முயற்சியை எடுத்து வருகிறார்.

சந்திரிகா விடுத்திருக்கும் இந்த உத்தரவை - பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன உடனடியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்காத போதிலும், இதையே சாட்டாக வைத்து - தன்னிடமுள்ள முப்படைகளின் தளபதி என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி போருக்கான உத்தரவைப் பிறப்பித்தாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை.

சமாதான முயற்சிகள் தொடரப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் - புலிகள் இடைக்கால நிர்வாகம் தொடர்பான தீர்வு யோசனைகள் குறித்த சர்வதேச மட்டக் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்ற நிலையில், இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை தீர்வு யோசனைகள் எதையுமே முன்வைக்காத புலிகள் - அத்தகையதொரு நிலைப்பாட்டுக்கு வந்திருக்கும்போது, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க- இந்தச் சூழ்நிலையைக் குழப்பியடிக்கும் நடவடிக்கையில் இறங்கியிருப்பதாகக் கருதப்படுகிறது.

சமாதானச் சூழலைக் குழப்பி, நாட்டில் இரத்த ஆறு ஓடவைக்கும் எந்தவொரு முயற்சிக்கும், விடுதலைப் புலிகள் இலகுவில் இடங்கொடுக்கமாட்டார்கள் என்றபோதும்-

அரசபடைகளை ஏவிவிட்டுப் புலிகள் முகாமை அழிக்கவோ, அகற்றவோ சந்திரிகா நடவடிக்கை எடுப்பாரேயானால், புலிகள் நிச்சயம் பொறுமையோடு இருக்கமாட்டார்கள் என்றே கருதப்படுகிறது.

தாம் நீண்டகாலமாகப் பேணிவந்த ஒரு முகாமை புலிகள் கைவிட்டுச் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பதென்பதுவேறு - அந்த முகாமை அரசபடைகள் அகற்ற இடமளிப்பதென்பதுவேறு -

ஜனாதிபதி சந்திரிகா இரண்டாவது காரியத்தையே செய்யமுனைகின்றார். அவரது இந்த முயற்சி மிகவும் ஆபத்தானதென அவர் உணராதிருக்கமாட்டார். இந்த உத்தரவால் நாடு எத்தகைய ஆபத்துக்குள் சிக்கிக் கொள்ளும் என்பதை அவர் அறியாதிருக்கமாட்டார்.

இவ்வாறு தெரிந்திருந்தும் நெருப்புக்குள் காலை வைத்துக்கொள்ள அவர் விரும்புகிறார் என்றால், சமாதான முயற்சி மீது அவருக்கு இருக்கும் காழ்ப்புணர்வையே வெளிப்படுத்துகின்றது.

# வவுனியாவில் பொங்குதமிழ் நிகழ்வுக்கு படையினர் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவிப்பு!

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நடத்த ஏற்பாடாகியுள்ள பொங்கு தமிழ் நிகழ்வுகளுக்கு, இராணுவத்தினர் தமது எதிர்ப்பை வெளிக்காட்டிவருகின்றனர்.

பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பாக, அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டமொன்றிற்கு - வர்த்தகப் பிரதிநிதிகள், பல்கலைக்கழக சமூகத்தினர், திணைக்களப் பிரதிநிதிகள் எனப் பலரும் அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால், அரச அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளக்கூடாது என, இராணுவ அதிகாரி ஒருவர் ஒப்பமிட்ட கடிதங்கள் - சம்பந்தப்பட்டோருக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இது தொடர்பாக, வவுனியா பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினரால் - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை நடத்தி, குறித்த இராணுவ அதிகாரி தனது கடிதத்தை வாபஸ் பெறவேண்டும் எனப் பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினர், போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவினரைக் கேட்டுள்ளனர்.

அதேவேளை - தென்னிலங்கையில் உள்ள அரசியற்கட்சிகள், சமாதானத்திற்கு எதிராக பேரணிகள் நடத்துகிறார்கள். ஆனால், தமிழ் மக்கள் நிரந்தர சமாதானம் வேண்டியே, இந்தப் பொங்குதமிழ் ஏற்பாடுகளை செய்துள்ளார்கள். இதில் எந்த இயக்கங்களினதுமோ, அரசியற்கட்சிகளினதுமோ பின்னணி கிடையாது. முற்றுமுழுதாகவே மக்களால் முன்னெடுக்கப்படும் எழுச்சிநிகழ்வே இது என, வவுனியா மாவட்ட பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

## நீதிமன்ற நடவடிக்கைகளை மேம்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி!

(கொழும்பு)

இலங்கையின் நீதிமன்ற நடவடிக்கைகளை மேம்படுத்த, ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

இது தொடர்பாகக் கருத்துவெளியிட்ட பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, இந்த நிதி உதவியின் மூலமாக நீதிமன்றத்துக்கான கட்டடங்களை அமைக்கமுடியும் எனவும், நீதித்துறை சார்ந்த ஆலோசனைகளைப் பெற்று நாட்டிலுள்ள நீதிமன்றங்களின் செயற்பாடுகளை முன்னேற்றமுடியும் எனவும் தெரிவித்தார்.

அண்மையில் பிலிப்பைன்ஸில் இடம்பெற்ற ஆசிய நாடுகளுக்கிடையேயான, நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான ஆராய்வுக்கூட்டத்திலேயே இந்த நிதி உதவி பற்றி அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

## உடல் அழகுபடுத்தும் நிலையமொன்றில் பெண்களுடன் முறைகேடாக நடந்துகொண்ட பொலிஸார்!

(கொழும்பு)

உடல் அழகுபடுத்தும் நிலையமொன்றில் முறைகேடாக நடந்த இரண்டு பொலிஸாரை, பம்பலப்பிட்டி பொலிஸார் கைது செய்தனர்.

பம்பலப்பிட்டியில் உள்ள அழகுபடுத்தும் நிலையமொன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மதுபோதையில் - சம்பந்தப்பட்ட இடத்திற்கு வந்த இரு பொலிஸார், அங்கிருந்த பெண்களுடன் முறைகேடாக நடந்துகொண்டதாகவும், பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது. இது தொடர்பாக, பொலிஸாருக்கு அறிவிக்கப்படவே, பம்பலப்பிட்டி பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து இருவரையும் கைதுசெய்துள்ளனர். (01)

# புலித்தேவனால் ஜனாதிபதிக்கு ஆபத்தா? பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா விசாரணை!

புலித்தேவனால் ஜனாதிபதிக்கு ஆபத்து உண்டா என்பது பற்றி , பொலிஸ் மா அதிபர் - முப்பதுபேரின் கருத்துக்களைப் பெற்றிருப்பதாகத் தெரியவருகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

அண்மையில் ஜனாதிபதி தனது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து, பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அது தொடர்பான பதில் கடிதம் ஒன்றை - பொலிஸ்மா அதிபர், ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்தில் - ஜனாதிபதியின் பாதுகாப்புத் தொடர்பாக பொலிஸார் ஆராய்ந்து வருவதாகவும், கொலை அச்சுறுத்தல்கள் எதுவும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இக்கடிதத்தை ஜனாதிபதி நிராகரித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகச் செயலாளர் புலித்தேவன் - கொழும்பில் உள்ள ஹோட்டல் ஒன்றில், கடந்த மாதம் 27 ஆம் திகதி தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அன்றையதினமே ஜனாதிபதி, தனக்கு கொலை அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் கூறி பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக ஆராய்ந்த பொலிஸ் மா அதிபர் புலித்தேவனால் ஜனாதிபதிக்கு ஆபத்து உண்டா என, சுமார் 30 பேரிடம் கருத்துக்களை அறிந்து ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தினார். இவற்றையே ஜனாதிபதி நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொதுக்கூட்டங்களில் அமைச்சர்கள் முரண்பாடுகளைத் தவிர்க்கவேண்டும்!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவு



அமைச்சர்கள், தங்களுக்கிடையேயான முரண்பாடுகளைப் பொதுக்கூட்டங்களில் தெரிவிப்பதைத் தவிர்க்கவேண்டுமென, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடந்தவாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டமொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கட்சிகளுக்குள்ளே உள்ள பிரச்சினைகளை, கட்சிக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள வேண்டுமெனவும், அவற்றை மக்கள் மத்தியில் கொண்டுசெல்லும்போது தேவையற்ற சிக்கல்கள் தோன்ற வாய்ப்புண்டு எனவும், அமைச்சர்கள் தமது இராஜினாமாக் கடிதங்களையும் பொதுக் கூட்டங்களிலேயே சமர்ப்பிக்கவேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அமைச்சர் காமினி லொக்குகே எழுப்பிய வினாவொன்றுக்கு பதில் அளிக்கும்போதே, பிரதமர் இதனைக் குறிப்பிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜே.வி.பி.யினர் மீதான தாக்குதல்; விசாரணை நடத்துமாறு உத்தரவு

## உள்துறை அமைச்சர் நடவடிக்கை

பொலனறுவ மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக ஜே.வி.பி. உறுப்பினர்கள் இனந்தெரியாத குழுக்களால் தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக, விசாரணைகளை நடத்துமாறு உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

பொலனறுவை மாவட்டத்திலுள்ள மெதிரிகிரிய, படல்கும்பர மற்றும் சில இடங்களில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் ஜே.வி.பியினர் இனந்தெரியாத குழுக்களால் தாக்கப்பட்டனர்.

இச்சம்பவங்கள் தொடர்பாக, விசாரணைக்கு உத்தரவிட்டுள்ள உள்துறை அமைச்சர் - ஜே.வி.பி. உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள ஜே.வி.பியினர் பொலிஸ நிலையத்துடன் தொடர்புகொண்டு பாதுகாப்பு உதவிகளைப் பெறலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - ஐக்கிய தேசிய முன்னணி பொலனறுவ மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே, இந்தத் தாக்குதல்களில் முன்னணி வகிப்பதாக, ஜே.வி.பி.சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

# பன்னிரெண்டு வருடகால வன்னி வாழ்க்கையை திரும்பிப் பார்க்க வைத்த 35 மணிநேர மின்தடை!

'உப்பு இல்லாவிட்டால் தான் உப்பின் அருமை தெரியும்', 'அப்பன் இல்லாவிட்டால் தான் அப்பன் அருமை தெரியும்' என்பார்கள். இப்போது - 'மின்சாரம் இல்லாவிட்டால்தான் மின்சாரத்தின் அருமை தெரியும்' என்பதையும் சேர்த்துக்கொள்ளலாம்.

கடந்த 14 ஆம் திகதி சரியாக மாலை



4.10 மணிக்கு திடீரென மின்சாரம் தடைப்பட்டது. அப்போது நான் கணினியில் - 'தமிழர் சமயம் எது' என்ற கட்டுரையை எழுதிக்கொண்டிருந்தேன். வழக்கம்போல அதனை சேமிக்க மறந்து போனேன். ஒரு மணித்தியால உழைப்பு பாழ்.

பொதுவாக ரொரன்ரோவில் மின்சாரம் தடைப்படுவது ஆடிக்கொருக்கா, அமாவாசைக்கு ஒருக்காத்தான் இடம்பெறும். கூடியது ஒரு சில மணித்தியாலம. பின்னர் இணைபபுக் கிடைத்துவிடும். காலை போனால் மதியம், மதியம் போனால் மாலை, மாலை போனால் இரவு வந்துவிடும்.

சரி வேறுவழியில்லை. கொஞ்சநேரம் பேரப்பிள்ளைகளோடு பொழுதைப்போக்கலாம் என நினைத்தேன். அப்போதுதான், அடுத்த வீட்டுக்காரர் வேலிக்கு அப்பால் நின்றுகொண்டு, சிவப்புக்கொடி காட்டினார். அவர் ஒரு வட இந்திய பண்டிட். கோயில் அர்ச்சகராக இருக்கிறார். நன்றாக ஆங்கிலம் பேசுவார். வெளியில் காணும் நேரங்களில் புன்னகை ஒன்றை அவிழ விடுவார். அவரோடான உறவு அந்த மட்டில் தான் இருந்தது.

'உங்களுக்கு மின்சாரம் இருக்கிறதா?' 'இல்லையே' - 'எனக்கும்தான். அமெரிக்கா ஒகையோ **(Ohio)** மாநில மின்சாரநிலையத்தில் திடீரென ஏற்பட்ட வெடிப்பினால், மின்சாரத்தடை ஏற்பட்டுள்ளது. திரும்பிவர குறைந்தது இரண்டு நாட்கள் எடுக்கலாம். எனவே, சமையல் சாப்பாட்டுக்கு நீங்கள் மாற்று ஏற்பாடு செய்வதுதானே புத்திசாலித்தனம்.' அப்போது தான் மின்சாரத் தடையால் ஏற்பட்ட சிக்கல் பாரதூரமானது என்பது புரிந்தது. யோசித்துப் பார்த்ததில் மின்சாரம் தடைப்பட்டபோது, வழக்கத்தைவிட கணினியில் அதிர்வு கூடுதலாக ஏற்பட்டது நினைவுக்கு வந்தது!

மின்சாரம் தடைப்பட்டதால் கணினி, தொலைக்காட்சி, வானொலி, குளிர்சாதனப் பெட்டி, குளிரூட்டி, மின்விளக்குகள் எல்லாமே 'அவுட்'. விதிவிலக்கு தொலைபேசி மட்டுமே! ஆனால், அதுவும் அடுத்த நாள் மண்டையைப்போட்டுவிட்டது!

நல்ல காலமாக காலநிலை கணக்காக இருந்தது. புழுக்கம் பெரிதாக இல்லை. காற்று மெல்லிதாக வீசிக் கொண்டிருந்தது. குளிரூட்டி இல்லாவிட்டாலும் சமாளிக்க முடிந்தது.

காலநிலை புழுக்கமாக இருந்திருந்தால், பெரியளவில் வில்லங்கப்பட்டிருப்போம். நித்திரை கொள்வது மேலும் வில்லங்கமாக இருந்திருக்கும்.

இந்த இருண்ட பின்னணியிலும், ஒரு நல்ல செய்தி. தண்ணீர்க் குழாய்களில் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. சுடு தண்ணீருக்கும் பஞ்சம் இருக்கவில்லை. மின்சாரத்துக்குப் பதில் எரிவாயுவைப் பயன்படுத்தி, தண்ணீர் கொதிக்க வைக்கப்படுவதால் தப்பினோம்.

பணிக்குக் கீழ்ப்பட்டினத்துக்குச் சென்றவர்கள் - பாதாள தொடர்வண்டி ஓடாததால், நடுவீதியில் 'அம்போ' எனக் கைவிடப்பட்டார்கள். பேரூந்துகள் தான் அவர்களை மெல்லமெல்ல ஏற்றி இறக்கியது. ஐந்து மணிக்கு வேலையை முடித்துவிட்டு வெளியே வந்தவர்கள். இரவு 10-11 மணிக்குத்தான் வீடு வந்து சேர்ந்தார்கள்.

வாகன வசதியுள்ள கணவன்மார்கள்- சீதையை சிறைமீட்ட இராமன் போல, ஆங்காங்கே தவித்துக்கொண்டிருந்த தங்கள் துணைவிமார்களை - 30-40 கிலோ மீற்றர் தூரம் வாயுவேகத்தில் பாய்ந்து சென்று, சிறை மீட்டு வந்தார்கள்!

இங்குள்ள உயர்மாடிக் கட்டடங்களில் வாழுகின்றவர்கள், குறிப்பாக முதியோர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டார்கள். கீழே வருவதென்றால், 3-45 மாடிப்படிகளில் - இருட்டில் இறங்கவேண்டும். பின்னர், மறுபடியும் மலையேறவேண்டும்.

தொலைக்காட்சி. வானொலி நின்று விட்டதால், உலகில் என்ன நடக்கிறது என்பது தெரியவில்லை. நல்ல காலமாக, பற்றறியில் இயங்கும் சின்ன வானொலி ஒன்று கைகொடுத்துக் காப்பாற்றியது.

வெள்ளிக்கிழமை முழுநாளும் மின்சாரம் இல்லை. வழக்கமாக நாள் தவறாது, வெளிவரும் நாளேடுகள் வெள்ளி வெளிவரவில்லை. அன்று வெளிவரவேண்டிய தமிழ்க்கிழமை ஏடுகளும் வெளிவரவில்லை.

அறிவியல் கண்டுபிடிப்புக்களில் - மின்சாரத்தைக் கண்டுபிடித்ததே மிகவும் புரட்சிகரமானது, பயனுள்ளது என்பது எனது எண்ணம். மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே அதன் ஆற்றலை வைத்து வானொலி, தொலைக்காட்சி, குளிரூட்டி போன்றவை கண்டுபிடிக்கப்பட்டன.

மின்சாரசக்தியைக் கண்டுபிடித்தவர் மைக்கல் பரடே **(Michael Faraday)** என்ற ஆங்கிலேய அறிவியலாளர் (1791-1867). தனது 21 ஆவது அகவையில் புத்தகம் கட்டுபவராக வாழ்க்கையை ஆரம்பித்த அவர், முடிவில் இரசாயன பேராசிரியராக உயர்ந்த பதவியில் அமர்த்தப்பட்டார். இது வியப்பைத் தரும் செய்தியாகும். அவர் மின்சாரத்தை 1831 இல் கண்டுபிடித்தார். மைக்கல் பரடே **Electromotive Force** இன் தந்தை என அழைக்கப்படுகிறார்.

ஆனால், மனித நாகரிகத்தின் போக்கை மாற்றியமைத்த இந்த அறிவியலாளரை, எத்தனைபேர் நினைவில் வைத்திருக்கிறார்கள்?

ஒன்ரோறியோ மாகாண முதல்வர் அவசர கால நிலைமையைப் பிரகடனப்படுத்தினார். எல்லோருக்கும் வெள்ளிக்கிழமை விடுமுறை நாள் என அறிவிக்கப்பட்டது. மேலதிகமாகத் திங்கள், செவ்வாய் அரச ஊழியர்களுக்கு விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை நீண்ட பகலாக இருந்தது. பூமியின் இயக்கம் குறைந்து விட்டது போன்ற உணர்வு. நேரம் போகமாட்டேன் என்றது.

நான் இதுதான் சமயம் என்று, அறிவியலாளர் டார்வின் பற்றிய புத்தகம் ஒன்றை படித்து முடித்தேன். பகுத்தறிவுவாதிகள் ஒவ்வொருவரும் டார்வின் எழுதிய- 'உயிர்களின் மூலம்' **(Origin of Species)** என்ற நூலைக் கட்டாயம் படிக்கவேண்டும். கடவுள்தான் மனிதனைப் படைத்தான் என்ற கோட்பாட்டுக்கு வேட்டு வைத்த நூல் அது! சமயவாதிகளது, குறிப்பாக - கிறித்துவப் பாதிரிமார்களது வயிற்றில் புளியைக் கரைத்து, அவர்களை அதிர்ச்சிக்கு ஆளாக்கிய நூல்.

வானொலி, தொலைக்காட்சியில் தோன்றிப் பேசிய கனடா பாதுகாப்பு அமைச்சர் மின்சாரத் தடைக்கு, அமெரிக்க நகரில் ஒன்றான **Cleveland** இலுள்ள அணுஉலையில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணம் என்று பயமூட்டினார் (இது பின்னர் அறிந்து கொண்ட விடயம்).

தீ விபத்து பின்லேடனின் கைவேலையா இருக்கலாம் என்று நினைத்த பலரது ஐயத்தை உறுதிசெய்ய வைத்தது. நல்லவேளை இந்தச் செய்தியில் எந்த உண்மையும் இல்லை என்று, பின்னர் தெரிவிக்கப்பட்டது. அமைச்சரும் பெருந்தன்மையோடு மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

மின்சாரத்தடையைப் பயன்படுத்திக் கொண்டு, உணவகங்கள் - சாப்பாட்டு விலையை எக்கச்சக்கமாக ஏற்றிவிட்டன. ஒரு டொலருக்கு விற்கப்படும் தண்ணீர் போத்தல், இரண்டு மூன்று மடங்கு விலையில் விற்கப்பட்டது.

எரிபொருள் நிலையங்கள் ஒரு லிற்றர் பெற்றோலை ஒரு டொலருக்கு விற்றார்கள். அதன் வழக்கமான விலை ஒரு லிற்றர் 65 சதம் மட்டுமே!

இப்படியான சூழ்நிலையை அதிக இலாபம் ஈட்டப் பயன்படுத்துவதில், முதலாவது நாடு, மூன்றாவது நாடு என்ற பேதமில்லை!

வழக்கமாக வட அமெரிக்காவில் மின்சார இருட்டடிப்பு நேரும் போதெல்லாம், குடிமக்கள் அங்காடிகளின் - கதவு, யன்னல்களை உடைத்து - தொலைக்காட்சி, வானொலி மற்றும் விலையுயர்ந்த வீட்டுக்குத் தேவையான பொருட்களை வேண்டுமானவற்றை மட்டும் எடுத்துக்கொண்டு - தோளிலும், தலையிலும் சுமந்துகொண்டு போவார்கள். என்ன மாயமோ மந்திரமோ இம்முறை அப்படிக் கொள்ளை ஏதும் நடைபெற்றதாகச் செய்திகள் இல்லை.

ரொரன்ரோவில் சின்னக் களவுக்காக, சுமார் 450 பேர் கைதுசெய்யப்பட்டார்கள். காவல் நிலையங்களில் இடநெருக்கடி ஏற்பட்டதால், பெரிய வாகனங்களுக்குள் இவர்களை திங்கள் மட்டும் அடைத்து வைக்கப்பட்டார்கள்.

வாழ்க்கையில் - இன்பமும், துன்பமும் தொடர்ச்சியாக வருவதில்லை. மாறிமாறித்தான் வருகின்றது. பாவேந்தர் பாரதிதாசன் 'துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா' என்று, காதலன் பாடுவது போல் பாடல் இயற்றியிருக்கிறார். இந்த உண்மை பலருக்கு உறைப்பதில்லை.

உலகமே முரண்பாட்டில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. வட துருவம் தென் துருவம், பிறப்பு இறப்பு, படைத்தல் காத்தல், அறம் மறம், மேல் கீழ், வெப்பம் குளிர், பாவம் புண்ணியம், வெளிச்சம் இருட்டு இப்படியே அடுக்கிக்கொண்டு போகலாம்.

மின்சார வெளிச்சம் இல்லாததால், வியாழன் இரவு 11 மணிக்குப் பின்னர், வெள்ளி நிலா முதன்முறையாக முற்றத்துக்கு வந்தது. வானத்தில் நட்சத்திரங்கள் கண்களைச் சிமிட்டின. இவைகள் கண்கொளாக் காட்சி.



நிலா என்றாலே என்னவென்றே தெரியாது வளரும் பிள்ளைகள், வாழ்க்கையில் முதன் முதலாக நிலாவைக் கண்டு களித்தார்கள்.

நைஜீரியாவில் பணி செய்த காலத்தில், மின்சார வெட்டு அடிக்கடி இடம்பெறும். சில சமயம் வாரக கணக்கில் மின்சாரம் வராது. அந்த வாழ்க்கையானது கொஞ்ச நாட்களில் பழகிப் போய்விட்டது.

முப்பத்து ஐந்து மணித்தியாலம் மின்சாரத் தடை ஏற்பட்டதால், அல்லோலகல்லோலப்பட்ட நாம்- வன்னியில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேல் மின்சாரம் இல்லாமல் வாழ்ந்த அந்த மக்களது வாழ்க்கையை எண்ணிப்பார்த்தேன். அவர்களோடு ஒப்பிடும்போது, எமக்கு ஏற்பட்ட இடைஞ்சல் தூசு போன்றது.

மின்சாரம் என்ன - வானொலியை இயக்குவதற்கு பற்றிகளே இல்லாமல் வன்னி மக்கள் அவதிப்பட்டார்கள். ஒரு பொருள் ஆரம்பத்தில் இருந்தே இல்லாமல் இருந்தால் அதுபற்றிய கவலை இருக்காது. ஆனால், இருந்த பொருள் இடையில் இல்லாமல் போனால், அதன் இழப்பு உறைக்கிறது.

மின்சார உற்பத்தியால் சூழல் மாசடைகிறது என்ற குற்றச்சாட்டு சூழல்நலம் பேணுபவர்களால் முன்வைக்கப்படுகிறது. அது உண்மையும்கூட. மின்சாரம் இப்போது மூன்று வழிகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. அவை யாவன -ஆற்று நீரைப் பயன்படுத்தல், கரியைப் பயன்படுத்தி தண்ணீரைச் சூடாக்கி அதில் வெளிவரும் நீராவியைப் பயன்படுத்தல், கரிக்குப் பதில் அணுசக்தியைப் பயன்படுத்தி நீரைக் கொதிக்க வைத்து நீராவியைப் பயன்படுத்தல் ஆகும். இந்த மூன்று வழிகளிலும் சூழல் மாசடைகிறது.

வன்னியில் மின்சாரம் இல்லாத கவலை இருக்கலாம். ஆனால், சூழல் மாசடைவதில்லை என்பது ஆறுதல்தரும் விடயம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிணறுகளில்

## கனடாவிலிருந்து நக்கீரன்

உள்ள நீரின் மட்டம் குறைந்து வருவதாக, ஜேர்மானிய நிபுணர் ஒருவர் அண்மையில் கருத்துத் தெரிவித்தார். அதை நிவர்த்தி செய்ய மழைத் தண்ணீரை அதிகளவில் சேமிக்க வேண்டும் என்பது, அவரது மாற்று யோசனை. யாழ்ப்பாணக் குடாநாட்டில் தொழிற்சாலைகள் இல்லாததால், பெய்யும் மழை நீர் சுத்தமானதாக இருக்கிறது என, அந்த நிபுணர் தெரிவித்தார்.

அறிவியல் வளர்ச்சியால் மனித நாகரிகம் வளர்ச்சியடைகிறது. ஆனால், அந்த வளர்ச்சிக்கும் ஒரு விலைகொடுக்க வேண்டியிருக்கிறது. உண்ணும் உணவு, சாப்பிடும் பழங்கள், குடிக்கும் தண்ணீர், சுவாசிக்கும் காற்று எல்லாவற்றிலும் உடல் நலத்தைப் பாழாக்கும் இராசாயனக் கலப்புக்கள், தூசுகள் இருக்கின்றன. மின்சாரம் நல்ல வேலைக்காரன். ஆனால் அந்த வேலைக்காரனை வைத்திருப்பதற்கு ஒரு விலைகொடுக்க வேண்டியுள்ளது. அதைத்தான் 35 மணிநேர மின்தடை எடுத்துக் காட்டியது.

# தடுத்து வைத்திருந்த படகுகளை இந்திய அரசாங்கம் விடுவித்தது!

இந்தியா நாகபட்டினம் இறங்குதுறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த, 68 இலங்கை அகதிகளுடைய இயந்திரப் படகுகளை, இந்திய அரசு விடுவித்துள்ளது.

கடந்தகால யுத்த நடவடிக்கையின் போது- வடக்கு கிழக்கிற்குப் பிரதேசத்திலிருந்து கடல் மார்க்கமாகச் சென்ற அகதிகளுடைய இயந்திரப்படகுகள், இந்திய காவற்படையினரால் நாகபட்டினம் இறங்குதுறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன.

இந்தியாவிலிருந்து மீளக்குடியமர்ந்த யாழ்ப்பாணம், மன்னார் பகுதி அகதிகள் தமது படகுகளை, மீள ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்தியத் தூதுவர் ஆகியோருக்கு மகஜர் அனுப்பி இருந்தனர்.

இதனையடுத்து - நாகபட்டினம் இறங்குதுறையில், தடுத்து வைக்கப்பட்டிருந்த 68 இயந்திரப்படகுகளைச் சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைப்பதற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வட ஈராக்கில் இனக்கலவரம்; பலர் பலியானதாக அறிவிப்பு!



ஈராக்கின் வடபகுதியில் அமைந்த கோர்குக் நகரில், கசேட்ஷ், ரேக்மன் ஆகிய இனங்களிடையே ஏற்பட்ட கலவரங்களின் பலர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் அப்பகுதிக்கு கூடுதலான ஈராக்கிய பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கலவரங்களில் இறந்தவர்களின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

முககிய இரு மதங்களிடையே ஏற்பட்ட பிரச்சினையே கலவரம் உண்டாவதற்கு காரணமானதென, அந்த நகரத்து தலைவர் அறிவித்துள்ளார்.

ஈராக்கிய பொலிஸார் கலவரத்தை அடக்குவதற்கு முயற்சித்தபோது கலவரக் காரர்களால் இரு ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதாக அமெரிக்க படையினர் அறிவித்துள்ளனர்.

15 பொதுமக்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டிருக்கலாமென அப்பகுதியில் வாழும்மக்கள் தெரிவித்துள்ளனர்.



பிரிட்டிஷ் தூதுவராலயத்துக்கு முன்னால் - அந்நாட்டுப் போர் வீரர் ஒருவர் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தபோது...

# ஈராக்கிற்கான ஐ.நா. பிரதிநிதியின் மரணச்சடங்கு இன்று பிரான்ஸில்!

கடந்த செவ்வாய்க்கிழமை பக்தாத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின், ஈராக்கிற்கான பிரதிநிதி சேர்கி யோ விஜெரா டீ மெல்லின் பிறந்த நகரமாகிய றியோ டீ யநெய்ரோவிற்கு, பிரேசில் இராணுவ விமானத்தில் அவரது உடல் இறுதிக்கிரியைகளுக்காக கொண்டுவரப்பட்டது. மரணச்சடங்கில் அவரது மனைவியும், இரு மகன்களும் பங்கு கொள்ளவுள்ளனர்.



சமாதானத்திற்காக இவர் தனது உயிரைத் தியாகம் செய்ததாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானும், பிரேசிலின் ஜனாதிபதி 'லுயிஷ் இனாசியோ லுலா டா சில்விலா'வும் குறிப்பிட்டுள்ளனர்.

ஈராக்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள், அந்தநாட்டில் இருந்து வெளியேறக் கூடாதென்பது அவரின் இறுதிவரையிலான விருப்பம் என கோபி அனான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - பிரேசிலின் ஜனாதிபதி எதிர்வரும் மூன்று நாட்களை துக்கதினமாக அனுஷ்டிக்கப்பட வேண்டுமென அறிவித்துள்ளார்.

இவரது இறுதிச் சடங்குகள் இன்று சுவிற்சர்லாந்தின் எல்லையில் அமைந்துள்ள பிரெஞ்சு நகராகிய தொனொன் லெஷ் பெயினில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.



ரஷ்யாவின் விமானப் படையின் சாகசக் காட்சியில் சுக்கோய் - 27 ரக விமானங்கள் புகையை வெளியேற்றிய வண்ணம் சாகசத்தில் ஈடுபடும் காட்சி.

# பலஸ்தீனியத் தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது தாக்குதல்!



பலஸ்தீனிய தீவிரவாதிகள் நேற்று றொக்கட் தாக்குதல்களை இஸ்ரேலியர் மீது நடத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பலஸ்தீனிய அதிகாரிகள் தாக்குதல்களை நிறுத்துமாறு, தீவரவாதிகளைக் கேட்டிருந்த பின்னணியிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பலஸ்தீனியர்களின் பாதுகாப்பு அதிகாரி 'மொகமட் டாலம்', காஸாப் பள்ளத்தாக்கில் மீண்டும் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டப் போவதாக தெரிவித்த கருத்தை - இந்தத் தாக்குதல்கள் பலவீனப் படுத்துவதாக பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அரபாத் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனிய தீவிரவாத அமைப்பான ஹமாசின் தயாரிப்பான குவாசம் 2 **(Qassam - 2)** என்ற ரொக்கெட் ஒன்று 'சீக்கிம்' கடற்கரைப் பிரதேசத்தில் விழுந்ததாகவும், இதனால் பொதுமக்களுக்கு எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை எனவும் இஸ்ரேலிய ராணுவம் அறிவித்துள்ளது.

இதேவேளை - மனித உரிமை அமைப்பின் கணிப்பின் பிரகாரம் இதுவரை பலஸ்தீனர்கள் வாழ்ந்த பிரதேசத்தில் 200 இற்கு மேற்பட்ட வீடுகள் தரைமட்ட மாக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



இஸ்ரேலிய போர் வீரர்கள், நபுலாசின பழைய நகரமொன்றில் தீவிர பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம.

# ஈராக்கில் நடத்தப்படும் தாக்குதல்; அமெரிக்கப் படையினர் திணறல்!

வெளிநாடுகளைச் சேர்ந்த தீவிரவாதக் குழுக்கள், ஈராக்கில் தாக்குதல்களில் ஈடுபடுவது அதிகரித்தமையால் அமெரிக்கப்படைகள் அதிக பிரச்சனைகளை எதிர்நோக்குவதாக, அமெரிக்காவின் ஈராக்கிற்கான பொது மக்கள் நிர்வாக அதிகாரி 'பிரிமர்' தெரிவித்தார்.

முன்னைய ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனின் ஆதரவாளர்கள், எண்ணெய்க் குழாய்களை சேதமாக்குவதிலும், மின் தடையை ஏற்படுத்துவதிலும் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் மீது அமெரிக்கா தாக்குதலை ஆரம்பித்த காலத்தில் இருந்து சதாமின் ஆதரவாளர்களான சுனி முஸ்லிம்களினால் கெரில்லாத் தாக்குதல் மூலம், அதிகளவில் அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

'அல் கெய்டா' தீவிரவாதிகளால் திட்டமிட்ட முறையிலான தாக்குதல்கள் ஈராக்கில் நடைபெறுவதாகவும், இருந்தபோதும், விரைவில் அமைதியான ஜனநாயக நாடாக ஈராக்கை மாற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## உலகவலம்

### கெலியின் குடும்பத்தினர் பாதுகாப்புஅமைசின் மீது குற்றச்சாட்டு

ஈராக்கிய ஆயுதங்கள் தொடர்பான அறிஞரும் விஞ்ஞானியுமான டேவிற் கெலியின் விசாரணையில் பிரித்தானியப் பிரதமரின் பேச்சாளர் கெலியை-மதவெறி கொண்டவர் எனக் குறிப்பிட்டிருந்தாரென டேவிட் கெலியின் மனைவி தனது சட்டத்தரணி மூலம் விசாரணைக்குழுவிடம் தெரிவித்திருந்தார்.



வெஸ்ட் பாங்கில், ஒடிலுஸ் என்ற நகரத்தில் வீடு ஒன்றுக்குள் உசார் நிலையில் காணப்படும் போர் வீரர்கள்.

# சமாதான முயற்சிகளில் ஈடுபடுமாறு ஐரோப்பிய ஒன்றியத்திடம் கோரிக்கை!



மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளில் முக்கிய பங்கை வகிக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்தை பலஸ்தீனியத் தலைவர் யாசீர் அரபாத் கேட்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுத் திட்ட அதிகாரி யாவியர் சொலனாவையும், பிரித்தானிய வெளிநாட்டு அமைச்சர் ஜக் ஸ்ரோவிடமும் - அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்ட சமாதானத்திட்ட வரைபை செயற்படுத்துவதற்கு தூண்டுமாறு கேட்டுள்ளார்.

ஒரு வாரம் நடைபெற்ற மோசமான வன்முறைகளுக்கும், மரணங்களுக்கும் பின்னர், இஸ்ரேலும் பலஸ்தீனமும் அமெரிக்காவிடம் சமாதானத்திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பான வேண்டுகோளை விடுத்திருந்தன.

இதனிடையே கடந்த சனியன்று இஸ்ரேல் படையினர் நப்லாஷ்சில் கல் எறிந்த பலஸ்தீனியர்களுடன் மோதிக் கொண்டதில் 16 பேர்வரை காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழ்-முஸ்லிம் உறவுகள் சீர்ப்படுத்த கல்முனையில் சமாதானச் சபை!

கல்முனையில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே உறவுகளைச் சீர்படுத்தவும், வன்முறைகளைக் கட்டுப்படுத்தவும் சமாதானச் சபை ஒன்று, நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கல்முனை பொலிஸ் நிலையத்தில் - பொலிஸ் அத்தியட்சகர் எம்.யு.எ.சரீப்டீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், விடுதலைப் புலிகளின் கல்முனைக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ராஜ்குமார், நிர்வாகப் பொறுப்பாளர் அறிவாணன், அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரி.லெமன்கம, விசேட அதிரடிப்படை அதிகாரி வஸந்த ரத்நாயக்க, பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர், தலைவர்கள், ஆலயத் தர்மகர்த்தாக்கள் மற்றும் தமிழ் - முஸ்லிம் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

இந்தச் சபைக்கு - கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலாளர் ஜி.அழகரத்தினம், கல்முனை முஸ்லிம் பிரதேச செயலாளர் ஏ.எச்.எம்.அன்ஷார், இணைத்தலைவர்களாகவும் - வைத்தியர் கே.முருகானந்தன், ஐ.எம்.மொகைதீன் உபதலைவர்களாகவும், கல்முனை இலங்கை வங்கி முகாமையாளர் எ.ஏ.கே. ஆனந்தராஜா, கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி அதிபர் எ.ஏச்.ஏ.பகீர், துணைச் செயலாளர்களாகவும் தெரிவு செய்யப்படடனர்.

அத்துடன், தமிழ் - முஸ்லிம் தரப்பில் மூவராக மொத்தம் ஆறுபேர், இந்தச் சபையில் உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்தச் சபை அமைக்கப்பட்டதன் நோக்கம், தமிழ் - முஸ்லிம் மக்களிடையே பதற்றத்தைத் தணித்து, உறவுகளை நல்நிலைப்படுத்துவதுடன், இனிமேல் இரு பகுதிகளுக்குமிடையில் வன்முறைச் சம்பவங்களை இடம்பெறாமல் தடுப்பதுடன், பிரச்சினைகள் வந்தால் - சமாதான சபையே தலையிட்டுப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும்.

இந்தச் சபையை அங்குரார்ப்பணம் செய்த பின்னர், உரையாற்றிய பொலிஸ் அதிகாரி எம்.யு.ஏ.சரீப்டின், சமாதானச்சபை மக்களை மதித்து சுயமாக இயங்குமெனவும், எந்த அரசியல் வாதிக்கும் அடிபணியத் தேவையில்லை எனவும், மக்களின் சமாதானம், சுகவாழ்வு என்பவற்றை நிலைநிறுத்தப்படும் எனவும் தெரிவித்தார். (07)

## நல்லூரில் கலையரங்கம்!

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் நிறுவனம், நல்லூர் ஆலய வீதியில் - கேணல் கிட்டு, லெப்.கேணல் திலீபன் நினைவாக சிறப்புக் கலையரங்கம் ஒன்றை நடத்தவுள்ளது.

இன்றைய நிகழ்வாக - என்.எஸ். மணியத்தின் நெறியாள்கையில், முள்ளியவளை தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் வழங்கும்- 'மாவீரன் பண்டாரவன்னியன்', நாட்டுக்கூத்து, அருணா இசைக்குழுவினரின் எழுச்சி கானங்களும் இடம்பெறவுள்ளது.

# அரச வைத்திய சேவை ஊழியர்கள் விடுமுறைகள் அனைத்தும் ரத்து!

## உடன் அமுலுக்கு வருகிறது

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், அரச வைத்திய சேவையில் பணிபுரியும் ஊழியர்களின் விடுமுறைகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக, அரசாங்கம் அறிவித்துள்ளது.

நோயாளிகளின் சிகிச்சையில் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக, சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் நீகால் விஜேதிலக தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை சுகசேவா சங்கம் உட்பட பல தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்ததையடுத்தே, சுகாதார அமைச்சு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

# நல்லூர் ஆலய வீதிகளில் வாகனங்கள் செல்லத்தடை!

நல்லூர் உற்சவத்தையொட்டி, இன்றுமுதல் மூன்று நாட்களுக்கு- நல்லூர் ஆலயவீதிகளில் வாகனங்கள் செல்ல முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதுவரையிலான 22 திருவிழாக்களிலும் - மதியம் ஒரு மணியளவிலிருந்து, மாலை மூன்று மணிவரை சைக்கிள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

ஆனால், சப்பறம், தேர், தீர்த்தம் ஆகிய மூன்றுநாள் திருவிழாக்களுக்கும் பெருமளவிலான மக்கள் கலந்துகொள்வர் என்பதால், காலை முதல் இரவு பத்துமணிவரை முற்றாக வாகனங்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# சமாதான உதைபந்தாட்டப் போட்டி மன்னார் மாவட்ட அணி சம்பியன்!

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற சமாதானத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியில் - மன்னார் மாவட்ட புனித சவேரியார் தேசிய ஆண்கள் கல்லூரி வெற்றிபெற்றது.

பம்பலப்பிட்டி சென்.பீற்றஸ் கல்லூரி மைதானத்தில், கடந்த 17 ஆம் திகதியிலிருந்து நடைபெற்ற இந்தப் போட்டியில் - நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில், மன்னார் புனித சவேரியார் தேசிய ஆண்கள் கல்லூரி அவர்களை எதிர்த்தாடிய யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை 4:3 என்ற கோல் கணக்கில் வென்று- கேடயத்தையும், ஒரு இலட்சம் ரூபா பணத்தையும், பெற்றுக்கொண்டது.

இந்த ஆட்டத்தின் சிறப்பு ஆட்டக்காரராக, மன்னார் புனித சவேரியார் கல்லூரியைச் சேர்ந்த ஜொய்சன் தெரிவுசெய்யப்பட்டார்.

## அம்பாறையில் தமிழர்களுக்கு மிரட்டல்!

அம்பாறை மாவட்டத்தில், வயல்களில் நெல்அறுவடை செய்துகொண்டிருந்த தமிழர்களை, உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு, இனந்தெரியாதோர் மிரட்டியுள்ளனர். இதனையடுத்து, வயல்களில் அறுவடை செய்துகொண்டிருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் வேலையைக் கைவிட்டு, தமது இடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

## புலிகளின்...

கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் முகாம் அமைத்தால், அது தொடர்பான சிக்கல்களை மத்தியஸ்தம் வகிக்கும் பிரிவினரே தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

ஆயினும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில், புலிகள் ஒப்பந்தத்தை மீறும் வகையில் நடந்தால், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு - சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அழுத்தம்கொடுக்க அரசு தவறாது எனவும் அவர் தெரிவித்தார்.

## கண்காணிப்புக்கு...

திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன், அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோர் பங்குபற்றுவார்கள் எனத் தெரியவருகிறது.

## கிழக்கு...

இந்தச் சந்திப்பில், வடக்கு - கிழக்கு மாகாண முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள் என்று அவர் கூறினார்.

முஸ்லிம்களின் பாதுகாப்புக் குறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் உட்படப் பல்வேறு விடயங்கள் குறித்து இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படும் என்று அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

# பன்னிரெண்டு அமைச்சர்களுக்கு எதிராக லஞ்ச ஊழல் சட்டத்தின்கீழ் விசாரணை!

பன்னிரெண்டு அமைச்சர்களுக்கு எதிராக, லஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழுவிலுள்ள உறுப்பினர் வெற்றிடத்தை, இரண்டு வார காலத்துக்குள் நியமிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க - அரசியல் யாப்பு சபைக்கு அறிவுறுத்திய கடிதத்திலேயே மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, அரசியல் யாப்பு சபையின் தலைவரான ஜோசப் மைக்கல் பெரேராவுக்கு, இந்தக் கடிதத்தை ஜனாதிபதி எழுதியுள்ளார்.

இந்த ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததினால், சட்டத்துக்கு விரோதமாகச் செயற்படும் நபர்களுக்கு எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்கமுடியாது இருப்பதாகவும், அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியிருப்பதாக, ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் அரசியல்...

ரீதியாக பாதுகாப்பு வலையொன்று ஏற்படுத்தபட்டுள்ளதாக, இலங்கை அரசாங்கம் கூறுகின்றபோதும், விடுதலைப் புலிகள் அது குறித்துக் கவலைப்படவில்லை. குறிப்பாக, அமெரிக்காவின் கருத்துக்களுக்கு புலிகள் பயப்படப்போவதில்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் - புலிகள் தம்மை சிறந்த முறையில் பலப்படுத்தியுள்ளனர். ஒரு துப்பாக்கி ரவையைக்கூட செலவுசெய்யாது, தமக்குத் தேவையானதில் 75 வீதத்தை அவர்கள் பெற்றுக்கொண்டுள்ளனர்.

நாட்டில் முக்கிய தீர்மானங்களை எடுக்கும் பொறுப்புக்கள், வெளிநாட்டுச் சக்திகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனால், பலநாட்டுப் பிரதிநிதிகளும் பலவிதமான கருத்துக்களை முன்வைக்கின்றனர். இது ஒருவரின் காதுகளில் பலர் கதைக்கும்போது குழப்பம் உருவாவதைப் போலுள்ளது.

திருகோணமலையைச் சுற்றி புலிகள் தங்களுடைய முகாம்களை, நெருக்கமாக அமைத்து வருகின்றனர். மீண்டும் யுத்தம் தொடங்குமானால், நான்கு மணித்தியாலங்களுக்குள் புலிகள் திருகோணமலையைக் கைப்பற்றிவிடுவார்கள் எனவும் லக்ஷ்மன் கதிர்காமர் மேலும் தெரிவித்தார்.


புலிகளின் குரல் நிறுவனம்
கேணல் கிட்டு, தியாகி லெப்.கேணல் திலீபன் நினைவாக நடத்தும்
சிறப்புக் கலையரங்கம்
நல்லூர் ஆலய வீதியில்

26.08.2003 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு
முள்ளியவளை தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் வழங்கும்
'மாவீரன் பண்டாரவன்னியன் நாட்டுக்கூத்து'
நெறியாள்கை - N.S.மணியம்
எழுச்சி கானங்கள்
'அருணா இசைக்குழு'

27.08.2003 புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு
ஜோன் கபாஸ் அவர்களின்
ஆர்மோனியக் கச்சேரி
எழுச்சி கானங்கள்
'சாரங்கா இசைக்குழு'

28.08.2003 வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு
கவியரங்கம்
பொன் காந்தன் தலைமையில்
புலிகளின் குரல் கலைஞர்கள் பங்குபற்றும்
இந்தப் பொழுதுகளில், அந்தப் பொழுதுகளா?
எழுச்சி கானங்கள்
இசைப்பிரியனின் இசையமைப்பில்,
தமிழீழத்தின் தலைசிறந்த பாடகர்கள் பங்குபற்றும் நிகழ்ச்சி
(சி-1380)







இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.